# விளையாட்டு உலகம்

தேசிய விருது பெற்ற நூலாசிரியர்

**எஸ். நவராஜ் செல்லையா**

M.A., D.P.E. (M.P.Ed.)



**ராஜ்மோகன் பதிப்பகம்**

10, ரெங்கநாதன் தெரு,

தி. நகர், சென்னை-600017

# முன்னுரை

விளையாட்டு உலகம் என்பது, வெறும் விளையாடும் உலகம் அல்ல. சிந்தை அணு ஒவ்வொன்றையும் அனுபவத்தாலும் ஆனந்தத்தாலும், அடுத்தடுத்து உண்டாகின்ற உணர்ச்சிமிகு போராட்டங்களாலும் சிலிர்த்தெழுச் செய்கின்ற விந்தைமிகு உலகமாகும்.

புயல் போன்ற போராட்டம், பொறுமை நிறைந்த பேபாட்டம், பண்பிலுல் நெகிழ்ந்த தேரோட்டம், பாசங்கள் கலந்திடும் நீரோட்டம், விதிகளை மாற்றிடும் வெள்ளோட்டம் என்று ஆட்டங்களையும், ஓட்டங்களையும் அடக்கிக்கொண்டிருக் கின்ற விளையாட்டு உலகம், காண்போரையும், கற்போரையும், கேட்போரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்ற இன்பத் தோட்டமாகும்.

அந்த இன்பத் தோட்டத்திலே தான், எத்தனை எத்தனை வண்ணமலர்கள்! உலகப் புகழ் பெற்ற சில வீரத்திலகங்களை வண்ணமலராக எடுத்து, எண்ணத்தால் மாலை தொடுத்து, விளையாட்டு உலகம் என்ற பெயரில் உங்களிடம் சமர்ப்பித்து இருக்கிறேன்.

மணம் மிகுந்த மாலையிலுள்ள ஒவ்வொரு மலரும், உங்களை அற்புத உலகத்திற்கு அழைத்துச்சென்று ஆனந்த நடன மாடும். அறிவுலகத்திற்கு அழைத்துச் சென்று நிறை வோடு உறவோடும், கற்பனைபுரிக்குச் கூட்டிச் சென்று காவிய சிந்துபாடச் செய்யும். இப்படியும் இருக்குமா விளையாட்டு உலகம் என்று உங்களை இனம் புரியாத இன்பத்தில் திக்கு முக்காடச் செய்யும்.

தமிழ் இலக்கியத்திற்கு இந்த நூல் ஒரு புதிய முயற்சி. பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, எனது விளையாட்டுத்

துறை மாத இதழான "விளையாட்டுக் களஞ்சியத்தில்" வெளி வந்த சொல்லோவியங்களைத் தொகுத்து, உங்கள் கைகளில் தவழ விட்டிருக்கிறேன்.

உலகப் புகழ் பெற்ற வீரர்களின் உன்னத வாழ்க்கையில் நடந்த ஒப்பற்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துக் கூறித் தந்திருப்பது, தமிழகத்து மாணவ மாணவிகளும் வாலிபர்களும் இத்தகைய பண்பாடும் பாரம்பரியமும் பெறவேண்டும். அவர்கள் தம் வாழ்வும் மலர வேண்டும் என்ற ஏற்றமிகு நோக்கமே தவிர வேறொன்றும் அல்ல.

என் நோக்கம் வெற்றி பெறுமேயாயின், அது நான் பெற்ற பேறு என்று மகிழ்வேன்.

இந்த அரிய நூலையும், ஏற்கெனவே வெளியாகி வந்த எனது நூல்களை ஏற்று மகிழ்ந்து பாராட்டி ஆதரவு தந்த தமிழ் கூறும் நல்லுலக மக்கள் திருக்கரங்களிலே மகிழ்ச்சியுடன் படைக்கிறேன்.

வணக்கம்

ஞானமலர் இல்லம்
சென்னை-17

எஸ். நவராஜ் செல்லையா

# உள்ளே...


1. இதுவன்றோ இதயம்! ... 9
2. வெற்றி மேல் வெற்றி! ... 12
3. அஞ்சாத அஞ்சல் காரன் ... 15
4. வரலாறு வாழ்த்துகிறது! ... 20
5. அளவிலா ஆனந்தம்! ... 24
6. இனி ஒருவர் இல்லை காண்! ... 25
7. வாழ்க நின் வலிமை! ... 32
8. உழைத்தேன்! உயர்ந்தேன்!! ... 37
9. புத்தாண்டு வாழ்த்துக்கள்! ... 41
10. சக்தியின் சாதனை! ... 45
11. உயரம் உயர்கிறது! ... 49
12. பாதைக்கேற்ற பயணம்! ... 54
13. தன்மானத் தங்கம்! ... 59
14. தனிப் பெருந்தலைவன்! ... 64
15. விதி விளையாடுகிறது! ... 68
16. அது தான் அதிர்ஷ்டம்! ... 72
17. பரப்பரப்புக்குப் பின்னால்! ... 78
18. இனிக்காத இன்பம்! ... 82
19. ஒலிம்பிக்கில் ஓடிய இட்லர்! ... 87
20. ஒரு தாயார் ஓடத் தயார்! .. 92

## ஆசிரியரின் பிற நூல்கள்

### விளையாட்டுக்களின் வரிசை

| | | | |
|---|---|---|---|
| 1. | கால்பந்தாட்டம் (Foot Ball) | 4 | 00 |
| 2. | கைப்பந்தாட்டம் (Volley ball) | 4 | 00 |
| 3. | கூடைப் பந்தாட்டம் (Basket ball) | 4 | 00 |
| 4. | வளைகோல் பந்தாட்டம் (Hockey) | 4 | 00 |
| 5. | கிரிக்கெட் ஆட்டத்தில் கேள்வி பதில் (Cricket) | 4 | 00 |
| 6. | கேரம் விளையாடுவது எப்படி (Carrom) | 4 | 00 |
| 7. | சதுரங்கம் விளையாடுவது எப்படி (Chess) | 4 | 00 |
| 8. | பூப்பந்தாட்டம் (Ball Badminton) | 5 | 00 |
| 9. | கோகோ ஆட்டம் (Kho-Kho) | 4 | 50 |
| 10. | சடுகுடு ஆட்டம் (Kabaddi) | 5 | 00 |
| 11. | நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் (Athletics) | 6 | 00 |
| 12. | வளையப் பந்தாட்டம் (Tenikoit) | 2 | 50 |

### விளையாட்டுக்களின் வரலாறு

| | | | |
|---|---|---|---|
| 13. | விளையாட்டுக்களின் கதைகள் (பாகம் 1) | 4 | 50 |
| 14. | விளையாட்டுக்களின் கதைகள் (பாகம் 2) | 4 | 50 |
| 15. | ஒலிம்பிக் பந்தயத்தின் கதை (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 3 | 00 |
| 16. | விளையாட்டுகளுக்குப் பெயர் வந்தது எப்படி | 3 | 25 |
| 17. | விளையாட்டுக்களின் விதிகள் | 14 | 00 |
| 18. | விளையாட்டுக்களின் வரலாறும் வழி முறைகளும் | | |

### விளையாட்டுத்துறையில் பொது அறிவு நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 19. | விளையாட்டு விருந்து | 5 | 00 |
| 20. | விளையாட்டுக்களில் விநோதங்கள் | 3 | 50 |
| 21. | விளையாட்டுக்களில் வினாடி வினாவிடை | 3 | 00 |
| 22. | விளையாட்டு விழா நடத்துவது எப்படி | 5 | 00 |
| 23. | பாதுகாப்புக் கல்வி | 2 | 50 |
| 24. | விளையாட்டு அமுதம் | 3 | 50 |
| 25. | விளையாட்டு உலகம் | 3 | 50 |
| 26. | விளையாட்டுச் சிந்தனைகள் | 3 | 00 |

### உடலழகுப் பயிற்சி பற்றிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 27. | நீங்களும் உடலழகு பெறலாம் | 3 | 50 |
| 28. | பெண்களும் பேரழகு பெறலாம் | 4 | 00 |
| 29. | உடலழகுப் பயிற்சி முறைகள் | 3 | 25 |
| 30. | பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள் | 5 | 00 |
| 31. | தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | 2 | 25 |
| 32. | எதற்காக உடற்பயிற்சி செய்கிறோம் | 2 | 00 |

### பொழுதுபோக்கு சிறு விளையாட்டுக்கள் (Minor Games)

| | | | |
|---|---|---|---|
| 33. | கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள் | 4 | 00 |
| 34. | ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள் | 5 | 50 |
| 35. | General knowledge in sports & Games | 1 | 25 |

### கதை கவிதை நாடக நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 36. | நல்ல நாடகங்கள் (நாடகம்) | 2 | 25 |
| 37. | செங்கரும்பு (கவிதை) | 2 | 00 |
| 38. | நல்ல கதைகள் (பாகம் 1) | 1 | 50 |
| 39. | நல்ல கதைகள் (பாகம் 2) | 1 | 50 |
| 40. | நல்ல கதைகள் (பாகம் 2) | 1 | 50 |
| 41. | மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள் | 5 | 00 |

### கட்டாய உடற்கல்விப் பாடத்திட்டத்திற் கேற்ப எழுதப்பட்ட உடற்கல்விப் பாட நூல்கள்

### மாணவர்களுக்குரிய தமிழ் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 42. | உடற்கல்விப் பாடநூல் 6ம் வகுப்பு | 1 | 50 |
| 43. | உடற்கல்விப் பாடநூல் 7ம் வகுப்பு | 1 | 50 |
| 44. | உடற்கல்விப் பாடநூல் 8ம் வகுப்பு | 1 | 50 |
| 45. | உடற்கல்விப் பாடநூல் 9ம் வகுப்பு | 1 | 50 |
| 46. | உடற்கல்விப் பாடநூல் 10ம் வகுப்பு | 1 | 50 |

## மாணவியர்க்குரிய தமிழ் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 47. | உடற்கல்விப் பாடநூல் 6ம் வகுப்பு | 1 | 50 |
| 48. | உடற்கல்விப் பாடநூல் 7ம் வகுப்பு | 1 | 50 |
| 49. | உடற்கல்விப் பாடநூல் 8ம் வகுப்பு | 1 | 50 |
| 50. | உடற்கல்விப் பாடநூல் 9ம் வகுப்பு | 1 | 50 |
| 51. | உடற்கல்விப் பாடநூல் 10ம் வகுப்பு | 1 | 50 |

## Physical Education Books (English)

### Boys

| | | | |
|---|---|---|---|
| 52. | Physical Education Book VI | 1 | 50 |
| 53. | Physical Education Book VII | 1 | 50 |
| 54. | Physical Education Book VIII | 1 | 50 |
| 55. | Physical Education Book IX | 1 | 50 |
| 56. | Physical Education Book X | 1 | 50 |

### Girls

| | | | |
|---|---|---|---|
| 57. | Physical Education Book VI | 1 | 50 |
| 58. | Physical Education Book VII | 1 | 50 |
| 59. | Physical Education Book VIII | 1 | 50 |
| 60. | Physical Education Book IX | 1 | 50 |
| 61. | Physical Education Book X | 1 | 75 |

# இதுவன்றோ இதயம்!

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் பேரார்வத்துடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்— இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காம் நகரத்தில் நடக்கும் 34வது உலக மேசைப் பந்தாட்டப் போட்டியைக் காண்பதற்காகத்தான். மேசைக்கு முன்னே, இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கும் இரண்டு வீரர்களும் போட்டிக்குத் தயாராக இருக்கின்றனர்.

ஒரு புறம் முப்பது வயது நிரம்பிய ஜப்பானிய வீரர். பெயர் **மிட்சுரு கோக்னோ.** 1967ம் ஆண்டு ஒரு முறை உலக வெற்றி வீரர் பட்டத்தை வென்றிருக்கும் பெருமையும் புகழும் உடையவர். 1975ம் ஆண்டு கல்கத்தாவில் நடந்த உலக மேசைப் பந்தாட்டத்திலும் பங்குகொண்டு ஆடி, நிறைய அனுபவம் பெற்று விளங்குபவர்.

மறுபுறம் 21 வயதான சீன வீரர். பெயர் **யாகுவாகுவா.** உடற்கல்விப் பயிற்சிப் பெறும் மாணவனாகிய அவர், இளமை ததும்பும் உடற்கட்டுக் கொண்டவர்.

போட்டி தொடங்கிவிட்டது. கடுமையான போட்டி தான். யார் வெல்வார், யார் தோற்பார் என்பதை யாரும் நிர்ணயித்துக் கூறமுடியாத அளவுக்கு இருவரும் சம ஆற்றல் படைத்தவர்கள் தான்.

முதல் 'முறை ஆட்டத்தில்' (Game), இளைஞரான யாகுவாகுவா எந்தவித சிரமமும் இன்றி, கோக்னேவை 21–17 என்ற வெற்றி எண் கணக்கில் வென்றார். இரண்டாம் 'முறை ஆட்டம்' தொடங்கியது. கோக்னே 7–4 என்ற வெற்றி எண் (Point) கொண்டிருந்தபோது, யாகுவாகுவா சர்வீஸ் போடுகிறார். கையில் பந்தை மறைத்து சர்வீஸ் போடுகிறார் என்று குற்றம் சாட்டி இவ்வாறு சர்வீஸ் போடுவது தவறு என்று நடுவர் கூறுகிறார். ஒரு முறையல்ல, இவ்வாறாக இரண்டாவது முறையும் குற்றம் சாட்டப்படுகிறது. அதனால் 2 வெற்றி எண்கள் எதிராளிக்குப் போய்ச் சேருகின்றன. இப்பொழுது ஜப்பானிய வீரருக்கு 9—4 என்று வெற்றி எண் ஏறுகிறது.

அதற்குப் பிறகு, சீன வீரரின் ஆட்டத்தில் சிறிது தடுமாற்றம், எதிர்பாராத குழப்பம். முன்பு ஆடியது போல அவர் ஆட்டத்தில் வேகமோ விறுவிறுப்போ இல்லை. எளிதாக ஜப்பானிய வீரரிடம் தோற்றுப் போகிறார். அதற்குப் பிறகு, தொடர்ந்து இரண்டு முறை ஆட்டங்களிலும் தோற்று, உலக வெற்றி வீரர் பட்டத்தை இழக்கிறார்.

போட்டி முடிகிறது. வென்ற வீரர் கோக்னே கூறுகிறார். "நடுவர் இவரை (யாகுவாகுவா) இரண்டு முறை குற்றம் சாட்டிவிட்டதால் தான், தன் எதிராட்டக்காரர் தோற்கக் காரணமாக அமைந்துவிட்டது" என்று தான் நினைப்பதாகத் தெரிவிக்கிறார்.

தோற்ற வீரர் கூறுகிறார். "அந்த நடுவரின் குறுக்கீடுதான் தன் தோல்விக்குக் காரணம் என்று நான் நினைக்கவில்லை. என் ஆட்டத்தில் ஏதோ சில குறைகள் இருக்கின்றன. அவை என்னவென்று எனக்கே தெரியவில்லை.அவற்றை நான் கண்டுபிடித்து, திருத்திக்கொண்டு, எனது திறமையை வளர்த்துக் கொள்ளவேண்டும்."

அத்துடன் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை.

"தனது கடமையை தைரியமாக, பரிபூரணமாக நிறைவேற்றிய நடுவரை நான் வியந்து பாராட்டு கிறேன்."

தோற்றவர்கள் எல்லோரும், நடுவர்களே தாங்கள் தோற்கக் காரணம் என்று கூறி, கடித்துக் குதறுவதை யும், ஓட ஓட விரட்டுவதையும், பொல்லாத வார்த்தை களால் அர்ச்சனை செய்வதையும் கேட்டுப் புளித்துப் போயிருந்த நமக்கு, சீன வீரரின் செம்மாந்த இதயமும் புரிகிறது. கடமை உணர்வுடன் பொழிந்த பண்பான வார்த்தைகளை கேட்கத் தேனுமிர்தமாக இனிக்கிறது.

நல்ல உடல் நல்ல மனம் என்பதுதானே நல்ல வர்கள் கொள்கை. இதைப் போன்ற பண்பான இதயத்தைத்தானே விளையாட்டுலகம் உருவாக்கித் தருகிறது என்கிறார்கள்.

அத்தகைய அருமையான இதயத்தை 'இதுவன்றோ இதயம்' என்று பாராட்டுகிறோம். விளையாட்டில் பங்கு பெறுகிற அனைவரும் இதுபோன்ற இதயம் பெற வாழ்த்துகிறோம். இறைவனை வணங்குகிறோம்.

# வெற்றி மேல் வெற்றி !

1500 ஆண்டுகளுக்குப் பிறகு 'புதிய ஒலிம்பிக் பந்தயம் பிறந்துவிட்டது. 1896 ஆம் ஆண்டு ஏதென்ஸ் நகரத்தில் முதல் பந்தய விழா நடைபெற இருக்கிறது. யார் வேண்டுமானாலும் வந்து போட்டியில் கலந்து கொள்ளலாம். வெற்றி பெறலாம்' என்ற அறிவிப்பு உலகெங்கும் பரவியது.

அமெரிக்க இளைஞன் ஒருவன். பெயர் ஜேம்ஸ் கன்னோலி. ஆர்வம் உள்ள வீரன். ஆனால், அந்த அள வுக்குப் பணவசதி இல்லாதவன். கிரேக்கம் நோக்கிப் போக விரும்பினான். போனால் வெற்றிபெற முடியும். போகமுடியுமா?

பாஸ்டன் விளையாட்டுக் கழகம் என்று அமெரிக் காவில் ஒன்று இருந்தது. பணக்கார இளைஞர்களாக எட்டு பேர்களைத் தேர்ந்தெடுத்து, ஏதென்சுக்குப் போய் வருவதற்கு ஆகும் செலவை ஏற்றுக்கொண்டது. ஆனால் ஜேம்சுக்கு வாய்ப்பில்லை. அவனுக்கு அது முதல் ஏமாற்றம்! இருந்தாலும், ஜேம்ஸ் ஆர்வத்தை இழக்க வில்லை.

தான் பணியாற்றிய இடத்தின் மேல் அதிகாரிகளிடம், பந்தயத்திற்குப் போக வேண்டுமென்று விடுமுறை கேட்டான். அவர்கள் அனுமதி தரவில்லை. விடுமுறையும் தரவில்லை. அதிலும் ஏமாற்றம்தான். வேலையை உதறிவிட்டு, பயணத்தைத் தொடங்கினான். முயற்சி அவனை முன்னேக்கித் தள்ளியது. புறப்பட்டு விட்டான்.

பணவசதியில்லாததால், அவனது பயணம் ஆடு மாடுகளை ஏற்றிச் செல்லும் சிறு படகிலே நடந்தது. அதற்காக அவன் களைக்கவில்லை. சளைக்கவில்லை. கவலைப்படவும் இல்லை. நேப்பிள்ஸ் என்ற நகரம் வந்தடைந்தபோது,வழிப்பயணத்தால் அவன் உடலால் வாடவில்லை. ஆனால், உள்ளத்தை வாட்டிக் கலக்கும் நிகழ்ச்சி ஒன்று அங்கே நடந்தது.

அவன் கொண்டுவந்த பயணப்பை தொலைந்து விட்டது. பணம், உடை மட்டும் அல்லாமல், ஏதென்சுக்குப் போக எடுத்திருந்த ரயில் டிக்கெட்டும் சேர்ந்து தான் போய்விட்டது! யாரும் தெரியாத இடத்தில் அது மோசமான நிலைதான். அப்பொழுதும் அவன் நிலை குலையவில்லை.

எப்படியோ டிக்கெட்மட்டும் கிடைத்தது.போனதை நினைத்துப் புலம்பாமல், வந்ததை நினைத்து, மகிழ்ச்சியுடன் பயணத்தைத் தொடர்ந்தான். ஏதென்ஸ் நகரத்தை அடைந்தான். பயணம் வெற்றிதான்.

'இன்னும் ஒருவாரம் இருக்கிறது போட்டி நடக்க. அதற்குள் நன்றாகப் பயிற்சி செய்து கொள்ளலாம்' என்று இருந்த ஜேம்சுக்கு, மேலும் ஒரு அதிர்ச்சி அங்கே காத்திருந்தது.

மிகச் சாதாரண ஓட்டலில் காலை சிற்றுண்டியை முடித்துக்கொண்டிருக்கும் பொழுது, அவசரமாக ஓடிவந்த ஒலிம்பிக் அதிகாரி ஒருவர், 'மும்முறைத் தாண்டும் போட்டிதான் (Hop Step and Jump) முதல் நிகழ்ச்சி' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

அவசர அவசரமாக ஓடினான் ஜேம்ஸ். மைதானத்தில் 75,000க்கு மேல் மக்கள் கூட்டம். கிரேக்க மன்னன் முதலாம் ஜேம்ஸ் வந்து காத்திருக்கிறார். போட்டி தொடங்க இருக்கிறது. ஜேம்ஸ் உள்ளே நுழைகிறான். யார் நீ? என்கின்றனர் அதிகாரிகள். தன்னை அமெரிக்கன் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறான். எப்படியோ அனுமதி பெற்றுவிடுகிறான்.

உடலைப் பதப்படுத்திக் கொள்கிறான். இருந்தாலும் மனப்பதட்டம் போகவில்லை. முதலில் தாண்டுகின்ற முயற்சியில் தோல்வி, ஆனாலும் மனம் தளரவில்லை. இரண்டாவது முயற்சியில் 45அடி தாண்டினான். ஆனால் அதுவே சிறந்த சாதனையாக அமைந்துவிடுகிறது.

புதிய ஒலிம்பிக் பந்தயத்தில், முதலாவதாகப் பரிசு பெறும் பாக்கியத்தைப் பெறுகிறான் ஜேம்ஸ். ஆரம்பத்திலிருந்தே தோல்வி அடிமேல் அடியாக வந்து விழுந்து தாக்கினாலும், அயராமல், ஆர்வத்துடன் முன் நடந்தான் வீரனாக. பயப்படாமல் பங்குபெற்றான் தீரனாக. அத்தகைய ஆர்வமும் முயற்சியும், நம்பிக்கையும் நல்லுழைப்பும் அவனுக்கு வெற்றிமேல் வெற்றி அல்லவா தந்திருக்கிறது! நமக்கெல்லாம் அவன் ஒரு முன்னோடியல்லவா?

# அஞ்சாத அஞ்சல்காரன்!

கடிதங்களைக் கைகள் சுமந்து கொண்டிருந்தாலும், கற்பனைக் கனவுகளை சுமந்து கொண்டு அவன் மனம் எப்பொழுதும் அலைபாய்ந்து கொண்டே இருக்கும். எதிரே யார் இருந்தாலும், அவன் இயம்பும் மொழிகள் ஒன்றைக் குறித்தே இருக்கும். ஒன்றையே குறிக்கும்.

'எப்படியாவது ஒரு நாள் நான் ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றி பெற்றே தீருவேன். உலகப் புகழ் அடைந்தே தீருவேன்' என்பதே அவனது பேச்சாக இருக்கும். அதுவே அவன் உயிர் மூச்சாகவும் இருந்தது.

அஞ்சல்காரனாகத் (Post-man) தனது தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும், அவனது ஆசை கொஞ்சமும் குறையவில்லை. கொழுந்துவிட்டு எரிந்து கொண்டு தான் இருந்தது. ஆசை வெட்கமறியுமா என்பார்களே, அந்த நிலையில்தான் அந்த அஞ்சல்காரன் நிலையும் இருந்தது. செயலும் இருந்தது.

முன்னே பின்னே ஓட்டப் பந்தயங்களில் ஓடியபழக்கமோ பயிற்சியோ அவனுக்குகிடையாது.வாழ்க்கையில்

வசதியான நிலையிலும் இல்லை. அன்றாடம் உழைத்தால் தான் அரை வயிறு நிரம்பும் என்ற பொருளாதார நிலை. என்றாலும், ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்துகொள்ளும் உறுதியில் உறுதியாகவே அஞ்சல்காரனின் நாட்கள் ஆரவாரமாகத் தொடர்ந்தன.

கியூபா நாட்டில் ஹவாரா என்ற இடத்தில் வாழ்ந்த இந்த அஞ்சல்காரனின் பெயர் **பெலிக்ஸ் கர்வஜால்** என்பதாகும். இப்படியே பணியாற்றிக் கொண்டிருந்தால் தன் முயற்சி பலிக்காது என்று புரிந்து கொண்டான் பெலிக்ஸ். அதனால், முதல் வேலையாகத் தன் வேலையை ராஜினுமா செய்துவிட்டான். மிகவும் தைரியமானவன் தான்.

வேலையிலிருந்து விடுதலை கிடைத்துவிட்டது. அதனால் வருமானம் மிகுதியாகுமா! 1904ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயம் செயின்ட் லூயிஸ் என்ற இடத்தில் நடக்க இருந்தது என்று அறிந்தவுடன் அங்கு போக வேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. அங்குப் போக வேண்டும் என்றால் பயணத்திற்குப் பணம் வேண்டுமே! துணிவு கொண்ட நெஞ்சம் தூரிதமாக சிந்திக்கத் தொடங்கியது.

ஒரு நாள்—ஹவாராவிலுள்ள ஒரு புல்வெளி நிறைந்த மைதானத்தைச் சுற்றிச் சுற்றி பெலிக்ஸ் ஓடத் தொடங்கிவிட்டான். நிற்காமல் ஓடிக் கொண்டேயிருந்ததைக் கண்டு, சிலர் வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். அதுவே பெருங் கூட்டமாகக் கூடத் தொடங்கிவிட்டது. கூட்டத்தின் முன்னே தன் கொள்கையான ஒலிம்பிக் பந்தயம் போவதைக் கூறி உதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டான்.

கேட்டவர்கள் அவனது கொள்கையைப் போற்றிப் பண உதவி செய்தனர். பணம் சேர்வதைக் கண்டு இவ்வாறாக அடிக்கடி பல இடங்களில் ஓடி ஓடிக் கூட்டம் சேர்த்து, காசு சேர்க்கும் கலையை விரிவுப்படுத்தினான். பெருமளவு இல்லாவிட்டாலும் போதிய அளவு கைக்குக் கிடைத்தப் பணத்தை எடுத்துக் கொண்டு, பயணத்தைத் தொடங்கிவிட்டான் பெலிக்ஸ்.

நியூ ஆர்லின்ஸ் என்ற இடத்தில் ஒரு நாள் தங்க நேரிட்டது. அங்கே சிலர் பணம் வைத்து சூதாடிக் கொண்டிருந்ததைப் பார்த்த உடன், பெலிக்சுக்கும் ஒரு அற்ப ஆசை வந்துவிட்டது. பணம் வைத்துத் தானும் ஆடினால், நிறைய பணம் வரும். செலவுக்கும் அதிகம் கிடைக்கும் என்று எண்ணி ஆடினான். 'உருட்டி விழிக்கப் போய் உள்ள விழியும் போச்சு' என்ற பழமொழி போல, பணத்தை எல்லாம் இழந்து வீதியில் நிற்கும் நிலைக்கு ஆளானான் பெலிக்ஸ்.

கையிலே காசு இல்லையென்றாலும், கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை. அவன் ஏறத்தாழ 700 மைல் தூரத்தை எப்படியும் ஓடிச் சென்று விடுவது என்று ஓட்டமாகவே ஓடினான். செயின்ட் லூயிஸ் என்ற நகரத்தை அடையும்போது, பெலிக்ஸ் பாதியளவு நலிந்தே போய்விட்டான். மெலிந்தும் போய்விட்டான்.

அமெரிக்க ஓட்ட வீரர்கள் சிலர் இவனது பரிதாப நிலைக்கு இரங்கி, உணவும் உடையும் அளித்ததோடு ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளவும் உதவி செய்தனர்.

ஓட்டப் பந்தய நாளும் வந்துவிட்டது. அவனும் ஓட வந்து விட்டான். பசியால் களைத்துப்போன

உடல். பிய்ந்தும் நைந்தும் போன முழங்கால் வரை நீண்ட கால்சட்டை. முழங்கை வரை தொங்கும் சட்டை. கனத்த காலணி. ஓட்டப் பந்தயத்தில் முதல் முறையாகக் கலந்துகொள்ளும் பயம். கொடுமையான வெயில். இவற்றிற்கிடையே பெலிக்சின் பந்தயம் தொடங்கியது. நன்கு பயிற்சி பெற்ற உலகப் புகழ் பெற்ற 31 வீரர்களுடன் பெலிக்ஸ் ஓடத்தொடங்கினான். அது 26 மைல் கெஜ தூரம் ஓடுகின்ற மாரதான் போட்டியாகும்.

முன்பின் ஓடிபழக்கமில்லாத ஓட்டம். இருந்தாலும், அஞ்சா நெஞ்சுடன் ஓடிக் கொண்டேயிருந்தான். ஆங்கிலம் தெரியாவிட்டாலும், அரை குறை பாஷையோடு வேடிக்கை பார்ப்பவர்களிடம் பேசிக் கொண்டும் கேலி செய்து கொண்டும் ஓடினான். இடையிலே பசி வந்து விட்டது. என்ன செய்வது! கைக்கெட்டும் உயரத்தில் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பச்சை ஆப்பிள் காய்கள் சிலவற்றைப் பறித்துத் தின்று கொண்டே ஓடினான். பசி மறைந்து விடவில்லை. கொஞ்சம் குறைந்ததுபோல் தோன்றியது.

வெயிலின் வெம்மையைத் தாங்காமல், பாதிக்கு மேற்பட்ட வீரர்கள் பாதியிலே படுத்துவிட்டனர். என்றாலும் பெலிக்ஸ் ஓடிக்கொண்டே இருந்தான். வெயில் கொடுமையும், மற்ற காரணங்களும் அவனுக்கு வயிற்று வலியை உண்டாக்கிவிட்டாலும்ஓட்டத்தை விடவில்லை. கீழே விழவில்லை. பயிற்சி பெற்ற ஓட்டக்காரர்களில் பதினேழுபேர் விழுந்ததும் அன்றி, பந்தயத்திலிருந்தும் விலகிக் கொண்டனர்.

அஞ்சாத அஞ்சல்காரன் அழகாக ஓடிவந்து, அரங்கத்துள் நுழைந்து முடித்தபோது, நான்காவதாக

வந்ததை அறிந்து,கைதட்டி வரவேற்றனர் பார்வையாளர்கள். அவனுக்கு வெற்றிப் பதக்கம் இல்லைதான். என்றாலும், பெலிக்சின் அஞ்சாத நெஞ்சத்தை அகிலமே வியந்து பாராட்டியது.

26 மைலுக்கு மேல் உள்ள ஓட்டத்தைத் தொடங்க 700 மைல் தூரம் ஓடி வந்து கலந்து கொண்ட வீரனின் வரலாறு, மறக்க இயலாத காவியமாக அல்லவா மாறிவிட்டது!

கியூபா நாட்டின் ஒரே பிரதிநிதியாக கலந்து கொண்ட பெலிக்ஸ், மாரதான் பந்தயத்தின் மறக்க முடியாத வீரனாகிவிட்டான். 'ஆண்மை மிகு பந்தயங்களுக்கு ஊக்கமும், உண்மையான உழைப்பும் இருந்தால்போதும், உலகப் புகழ் பெறலாம்' என்ற உயர்ந்த தத்துவத்தை உலகத்திற்கு வழங்கும் அஞ்சாத அஞ்சல்காரன் ஆனான்.

நாம் அந்த அரிய தத்துவத்தை ஏற்று வாழ்வில் மகிழ்வோமாக!

# வரலாறு வாழ்த்துகிறது !

இருந்தவர்கள் அத்தனைபேரும் முயன்று பார்த்து விட்டார்கள். முடியவில்லை. ஆறடி உயரத்தில் வைக்கப் பட்டிருக்கும் குறுக்குக் குச்சியைத் தாண்ட முடியாத அந்த இளைஞர்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அதாவது யாரால் முடியும் என்று!

முயற்சி செய்தவர்களின் முகங்களைப் பார்க்க என்னவோ போலிருந்தது அந்த இளைஞனுக்கு. அங்கே வந்தான். ஆறடி உயரத்தை அனுயாசமாகத் தாண்டி விட்டு, அவன் தான் செய்து வந்த வேலையைப்பார்க்கப் போனான்.

அவன் செய்த வேலை என்ன தெரியுமா?

பயன்படுத்தப்படும் அந்த விளையாட்டு மைதானத்தை சுத்தப்படுத்தி வைப்பதுதான்.

பயிற்சி செய்த வீரர்கள் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார்கள். தங்களால் தாண்ட முடியாத உயரத்தைத் தாண்டிக் காண்பித்த அந்த இளைஞனை, மிகவும்

ஆர்வத்தோடு பார்த்தார்கள். கைதட்டினார்கள். ஆச்சரியத்துடன் அருகே சென்று பாராட்டினார்கள்.

துப்புரவுப் பணியாற்ற அணிந்திருந்த கனமான காக்கி ஆடைகள். கனமான காலணிகள். களைத்த உடல். முன்பின் தாண்டிய பழக்கம் இல்லாத தன்மை. இத்தனையையும் வைத்துக்கொண்டு தாண்டிய அந்த இளைஞனைப் பார்க்க ஓடிவந்தவர்களில் பயிற்சியாளரும் ஒருவர். அவர் பெயர் வார்னர்.

வார்னர் அந்த இளைஞனை வாஞ்சையுடன் விசாரித்தார். அவனும் தன் வரலாற்றைக் கூறினான்.

அமெரிக்கப் பகுதியில் காடுகளில் வாழும் 'சாக்ஸ் அண்ட் பாக்ஸ்' எனும் செவ்விந்திய பரம்பரையைச் சேர்ந்தவன், கார்லைல் எனும் நகருக்குத் தொழிற் கல்விப் பயில வந்தவன். அங்கு தையற் தொழிலைக் கற்றுக்கொள்ளும் போதே, மாற்று வேலையாக விளையாட்டு மைதானத்தைத் தூய்மைப்படுத்தும் வேலையையும் செய்வதாகக் கூறினான். தன் பெயரை ஜேம்ஸ் பிரான்சிஸ் தோர்ப் என்றும் கூறினான்.

வார்னரோ விலைமதிக்க முடியாத மாணிக்கத்தைக் கண்டெடுத்தவர்போல் மகிழ்ந்தார். அவனது இளம் வயது காலத்திய சாதனையை அறிந்தபோது, மேலும் அவர் வியப்பில் ஆழ்ந்து போனார். ஓடுவது, மீன் பிடிப்பது, வேட்டையாடுவதுதான் ஜேம்ஸ் தோர்ப்பின் குடும்பத் தொழில். அவனோ தன் பெற்றோர்களையும் மிஞ்சிய வீரச் சிறுவனாக விளங்கினான்.

மூன்று வயதிலேயே குதிரை சவாரி செய்யும் ஆற்றல், பத்து வயதில் காட்டு மானை விரட்டிப்

பிடிக்கும் வேகம். தனியாகப் போய் காட்டுக் குதிரையைக் கயிறு போட்டு மடக்கி இழுத்துவரும் ஆண்மை போன்ற வரலாற்றை அறிந்தபோது, வார்னர் ஆனந்தப் பரவசம் அடைந்தார்.

வேலை செய்ய வந்த ஜேம்ஸ், வார்னரின் செல்லப் பிள்ளையானான். விளையாட்டுத் திடலில் அவன் கால் படாத இடமே இல்லை என்ற அளவிற்கு அவனது பயிற்சி நடந்தது. அவனை வெல்ல யாருமே இல்லை என்ற அளவுக்கு சக்தி வாய்ந்த வீரனாக தோர்ப் விளங்கினான்.

லாபயெட்டா என்பது ஒரு கல்லூரி. அதன் விளையாட்டுப் பயிற்சியாளர் புரூஸ் என்பவர். தன் கல்லூரியில் 49 வீரர்களுக்குப் பயிற்சி கொடுத்து, ஓட்டப் போட்டி நடத்துவதற்காகக் காத்திருக்கிறார். ரயிலில் வார்னரும் அவரது வீரர்களும் வருவதாக வந்த செய்தியை அறிந்து ரயிலடியில் காத்திருந்த புரூசுக்கு ஒரே ஏமாற்றம். வந்தவர்கள் வார்னரும் ஜேம்சும் தான். இரண்டே இரண்டு பேர் மட்டுமே வந்தனர்.

''நகரெல்லாம் விளம்பரப் படுத்தியிருக்கிறோம் விளையாட்டுப் பந்தயம் என்று நீங்கள் இரண்டுபேர் மட்டுமே வந்து, எங்களை அவமானப்படுத்தி விட்டீர்களே'' என்று புரூஸ் கோபித்துக்கொண்டார். ஒரே வீரன் ஜேம்சுடன் வந்த வார்னர், பதில் பேசவில்லை. ''பந்தயத்தைத் தொடங்குங்கள். போட்டிக்கு பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' என்று ஒரே வரியில் முடித்துக் கொண்டார்.

போட்டியும் நடந்தது. முடிவு என்னவென்று நினைக்கிறீர்கள்! ஜேம்ஸ் தோர்ப் மட்டுமே தனியாளாக போட்டியிலே வெற்றிபெற்று எடுத்த வெற்றி எண்கள்

71. 49 பேர்கள் சேர்ந்து வென்று, பெற்ற வெற்றி எண்கள் 41 தான்.

இவ்வாறு வெற்றி பெற்ற வீரனை அமெரிக்காவே வாழ்த்தியது. 1912ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயத்திற்கும் செல்ல வழி அனுப்பிவைத்து மகிழ்ந்தது. ஒலிம்பிக் சென்ற ஜேம்ஸ் தோர்ப், பத்துப் போட்டிகள் நிகழ்ச்சியில் (Decathlon) ஏறத்தாழ எல்லா நிகழ்ச்சிகளிலும் வென்றான். அத்துடன், ஐந்து நிகழ்ச்சிகள் போட்டியிலும் (Pentathlon) வெற்றி பெற்று, இரண்டு பெரிய நிகழ்ச்சிகளிலுமே தங்கப் பதக்கங்களை வென்று உலக சாதனையையும் ஏற்படுத்தினான்.

பரிசுகளைத் தர வந்தவர் ஸ்வீடன் நாட்டு மன்னன் ஐந்தாம் கஸ்டாவ் என்பவர். ஜேம்ஸின் செயற்கரிய சாதனையைப் பார்த்து அதிசயித்து. அவர் கூறிய வார்த்தைகளோ, உலக மக்களையேவியப்பில் ஆழ்த்தின.

'ஐயா! நீங்கள்தான் இந்த உலகத்திலே சிறந்த வீரன்' என்பது தான் அவர் கூறிய வார்த்தைகள்.

அமெரிக்கா, ஒரு சிறந்த வீர மகனைப் பெற்று, அகில உலகப் புகழ் பெற்றது.

சாதாரண குடும்பத்தில் பிறந்து, சிறிதளவு வசதிகள் கூட இல்லாத நிலையில் வாழ்ந்து, வயிற்றுப் பிழைப்புக்காக மைதானம் துடைக்கும் பணிகளையும் செய்த ஒரு இளைஞன், தன்னுடைய ஆற்றலினால் மாமன்னரும் வியந்து போற்றிட வைத்தது எதனால் என்று நினைக்கிறீர்கள்? விளையாட்டினால்தான்.

தனது உண்மையான திறனை உலகறிய வைத்த ஜேம்ஸ் தோர்ப்பை, வரலாறு வாழ்த்துகிறது. உங்களையும் நிச்சயம் வாழ்த்தும். வாருங்கள் உழைப்போம்! உயர்வோம்!!

# அளவிலா ஆனந்தம்!

---

'இந்தக் கடிதத்தை உடனே சேர்த்துவிடு—அவசரம்' என்று தன் எசமானன் கூறியதைக் கேட்ட அந்த இளைஞன், வாங்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தான். எங்கே? அஞ்சல் நிலையத்துக்கா? அதுதான் இல்லை. கடிதத்திலுள்ள முகவரியைப் பார்த்துவிட்டு, கடிதத்துக்கு சொந்தக்காரரை நோக்கித்தான். நேராகக் கொடுக்கவேண்டும் என்று தவருக நினைத்துக்கொண்டு தான் 17 வயது இளைஞனை அவன் வேகமாக ஓடினான்.

ஓடிய தூரமோ முப்பதுமைல் இருக்கும். ஓடி முடித்த நேரமோ 4 மணி நேரம். தவருக ஓடியவனை தட்டிக் கொடுத்து சரியான ஓட்டக்காரனாக மாற்றிவிட்டார்கள் அங்கு இருந்தவர்கள். இனிப்புப் பண்டங்கள் செய்து கொண்டிருந்த அவனும், நம்மாலும் ஓடமுடியும் என்று அறிந்துகொண்டு, இனி ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்வது என்ற முடிவுக்கும் வந்து, மிக உறுதியாகப் பழகவும் தொடங்கிவிட்டான்.

1908ஆம் ஆண்டு நடக்கின்ற ஒலிம்பிக் பந்தயத் திற்கு, இத்தாலி நாட்டின் பிரதிநிதியாகக் கலந்து

கொள்ளும் வாய்ப்பினையும் அந்த வீரன் பெற்றுவிட்டான். சிறந்த ஓட்டக்காரன் என்ற புகழையும் பெற்றிருந்த அந்த வீரன், அந்த ஆண்டு மாரதான் ஓட்டத்தினை அவன் தான் வெல்வான் என்ற நம்பிக்கையையும் பெருவாரியாகப் பெற்றிருந்தான்.

லண்டன் மாநகரத்தில் நடந்த பந்தயத்தில் மாரதான் ஓட்டப்பந்தயம் தொடங்கியது. லண்டன் மாநகரத்து மக்களுக்கெல்லாம் அந்த 22 வயது இளைஞன் மீது அளவிலா அன்பு இருந்ததற்குக் காரணமும் இருந்தது. இங்கிலாந்து நாட்டின் நகைச் சுவை நடிகரான சார்லி சாப்ளின் என்பவரைப் போன்ற முகச் சாயல், மீசை அமைப்பு, உடல் தோற்றம் கொண்டிருந்ததும், ஒரு காரணமாகும். அந்த இளைஞன் பெயர் டோரண்டோ பியட்ரி.

ஓட்டம் தொடங்கி, முடியக்கூடிய நேரம். அந்தப் போட்டி மாரதான் ஓட்டமாகும். மக்கள் குழுமியுள்ள அரங்கத்தில் ஒரு சுற்றுடன் ஓட்டம் முடிய வேண்டும் என்பதும் ஒரு விதி. டோரண்டோவும் முதல் மனிதனாக 26 மைல் தூரத்தை ஓடி முடித்துவிட்டு, அரங்கத்துள் நுழைந்துவிட்டான். அங்கிருந்த அத்தனை பேரும் ஆனந்த ஆரவாரம் செய்தார்கள். ஆனால், விதி அங்கு வேறுவிதமாக விளையாடிக் கொண்டிருந்தது.

வலது புறமாக ஓடவேண்டியவன், தவறாக இடது புறமாக ஓடத் தொடங்கிவிட்டான். கொஞ்ச தூரம் சென்ற பிறகுதான், மக்கள் கூட்டம் கூச்சல் போடத் தொடங்கிய போதுதான், அவனுக்குப் புரிந்தது. தவறைத் திருத்திக்கொண்டு, திரும்பி சரியான பாதைக்கு வந்து ஓட ஆரம்பித்தான்.

கால்கள் தடுமாறின. கண்கள் செருகிக் கொண்டன. உடல் தள்ளாடியது. இன்னும் கொஞ்ச தூரம்தான் எல்லையை அடைய. அடைந்தால் இனிய வெற்றி! உலகப் புகழ் பாராட்டு. தங்கப் பதக்கம்! 'ஓடு ஓடு' என்று கூடியிருந்தவர்கள் விண்ணை முட்டக் குரல் கொடுக்கின்றார்கள்.

அடியெடுத்து வைக்கும் பொழுதெல்லாம் தடுமாறி விழுகிறான் டோரண்டோ! நான்கு முறை கீழே விழுந்து தானே எழுந்து, சமாளித்து ஓட முயல்கிறான். 'உதவுங்கள். அவனுக்கு உதவுங்கள்' என்று கூட்டத்தின் ஒரு பகுதி பரிதாபமாக முறையிடுகிறது. அருகில் நிற்கும் அதிகாரிகளுக்கும் அவனைப் பார்க்கப் பாவமாகத்தான் இருக்கிறது. உதவினால், அவன் வெற்றி வாய்ப்பை இழந்து விடுவானே! என்றாலும் உதவத் தூண்டுகிறது டோரண்டோவின் பரிதாப நிலை.

பக்கத்திலிருந்த ஆங்கிலேய நாட்டு அதிகாரிகள் சிலர், அவனுக்குக் கைலாகு கொடுத்துத் தூக்கிவிட்டு, எல்லைக்கு கொண்டுவந்து சேர்க்கின்றனர். அரங்கத்துள் இருந்த அத்தனை பேரின் நெஞ்சமும் குளிர்ந்தது போலவே ஆனந்த ஆரவாரம்.

'டோரண்டோ வெற்றி பெற்றுவிட்டான்' என்பது தான் உச்சக் கட்டத்தில் பேசப்படுகிறது.

வெற்றியின் சின்னமாக இத்தாலியக் கொடியும் கம்பத்தின் உச்சியில் உயர்த்தப்படுகிறது.

இந்தக் கட்டத்தில், சிறிய உருவம்கொண்ட ஒரு அமெரிக்க நாட்டு இளைஞன் ஜான் ஹேய்ஸ் என்பவன்,

அடுத்த ஆளாக ஓடிவந்து ஓட்டத்தை முடித்து விடுகிறான். அமெரிக்க அதிகாரிகள் முறையிடுகின்றனர். முடிவு! ஓட்டத்தில் உதவிபெற்றதற்காக, டோரண்டோ போட்டியிலிருந்து, நீக்கப்படுகிறான். வெற்றி வீரனாக அமெரிக்கன் ஜான்ஹேய்ஸ் அறிவிக்கப்படுகிறான். டோரண்டோ தோல்வியைக் கண்டு தொய்ந்து போனான். அதுமட்டுமல்ல. பார்வையாளர்கள் அனைவருக்கும் பேரதிர்ச்சி.

தங்கப்பதக்கம் அவனுக்கு இல்லையே என்பதைத் தாங்க முடியாத நெஞ்சினர்களாகத் தவித்துக் கொண்டிருந்தார்கள் மக்கள். பரிசு வழங்கும் கட்டம் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இங்கிலாந்து இராணி அலெக்சாண்டரியா பரிசு வழங்குகிறபொழுது, அறிவிப்பு ஒன்று வருகிறது. மிகச்சிறப்பாக ஓடிய டோரண்டோவுக்கு இராணியார் தங்கக் கோப்பை ஒன்றை சிறப்புப் பரிசாக அளிக்கின்றார்கள் என்பதுதான்.

தங்கப்பதக்கம் இல்லைதான். வெற்றிவீரன் எனும் பட்டம் இல்லைதான். ஆனால் தங்கக் கோப்பையையும், மக்கள் இதயங்களிலே தங்கும் வாய்ப்பையும், பெரும் புகழையும் பெற்றுவிட்ட இத்தாலிய நாட்டு இனிப்புத் தயாரிப்பாளன் டோரண்டோ பியட்ரி, பெற்றதோ அளவிலா ஆனந்தம், பேரானந்தம்.

நாம் பெற்றதோ இதயத்தை மயக்கிய இனிப்புச் செய்தி.

அதற்கு ஈடு இணையும் இவ்வுலகில் தான் உண்டோ!

# இனி ஒருவர் இல்லை காண் !

பெற்றோர்களே முடிவு செய்து விட்டார்கள் இந்தக் குழந்தை பிழைக்காது என்று! என்றாலும், அந்தக் குழந்தை பிழைத்துக் கொண்டது. அதிர்ஷ்டம் உள்ள குழந்தைதான். பெற்றோர்களுக்கு மனநிறைவு தராத, உடல் நிறைவு பெறாமல் பிறந்து விட்ட குழந்தைதான்.

வலுவில்லாத உடல். தொய்ந்துபோன தன்மையில் உறுதியில்லாமல் பிறந்த குழந்தையைக் கண்டு, என்ன செய்வது என்று உள்ளத்தைத் தேற்றிக் கொண்ட பெற்றோர்கள், உந்திய பிள்ளை பாசத்தால் ஏற்றுக் கொண்டார்கள். தப்பித்துக்கொண்ட குழந்தையும் உணர்வு பூர்வமாக தள்ளாட்டத்துடன் வளர்ந்தது.

சாண் குழந்தை என்றாலும் ஆண் குழந்தை என்பார்களே அதுபோல, தானாகவே அந்தக் குழந்தையும் வளர்ந்தது. செல்லமாக வளர்த்தார்கள் பெற்றோரும். தொட்டில் மிதித்து, சீண்டி விட்டுச் சிரித்து மகிழும் குழந்தைப் பருவம் என்று நமது இலக்கியங்கள் பாடுமே, அதற்கேற்ப குழந்தையும் விளையாடிக் கொண்டு

வளர்ந்தது. ஆனாலும், வளர்ந்த குழந்தையை வாட்டு கின்ற விதி சும்மா விட்டு விடவில்லை.

எப்படியோ கொடிய நோயான 'இளம் பிள்ளை வாதம்' அந்தக் குழந்தைக்கு வந்துவிட்டது. ஆடி ஓடிக் களித்த குழந்தையின் கால்கள் அடங்கிக் கொண்டன. உடலோ படுத்த படுக்கையாகி விட்டது. உடன் ஓடிவந்த டாக்டர்களும் உற்ற உதவிகளைச் செய்து பார்த்து; கடைசியாகக் கைகளை விரித்து விட்டனர்.

'முடங்கிப் போன கால்களால் இனி நடக்க முடியாது' என்று இறுதி மடல் வாசிப்பது போல, ஓதிவிட்டுச் சென்று விட்டனர் டாக்டர்கள். டாக்டரும் கை விட்ட பிறகு என்ன செய்ய முடியும்? ஆண்டவனை வேண்டிக்கொண்டு ஆறுதல் அடைந்து கொள்ள வேண்டியதுதான் !

படுக்கையிலே கிடந்த சிறுவனின் மனதுக்குத் தெம்பினை ஊட்டுவதற்காக சில நல்லவர்கள் வந்தார்கள். "உடற்பயிற்சி செய்தால் உன் உறுதியற்ற கால்களுக்கு சற்று வலிவு கிடைக்கும். எழுந்து நிற்கவாவது முடியும்." அவர்களின் வாக்கு அச்சிறுவனுக்குத் தேவ வாக்காகப் பட்டுவிட்டது. வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருப்பவனுக்கு வைக்கோல் துரும்பைக் கண்டதும் தப்பிக்கத் தூண்டும் வலிய துணையாக உதவுவது போல, உடற்பயிற்சியை உண்மையாக, உளமார நம்பி அச்சிறுவன் பயிற்சி செய்யத் தொடங்கினான்.

உடற்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்தான். விடாது செய்தான். நம்பிக்கையுடன் செய்தான். உறுதியான மனதுடன் செய்தான். பயன் கிடைக்குமா என்ற

நினைவே இல்லாமல், இதுவே உற்ற துணை என்று ஏற்றுக்கொண்டு செய்தான். அவன் நம்பிக்கை பொய்க்கவில்லை. உழைப்பு வீண் போகவில்லை. உற்றதுணை என்ற நற்றுணையான உடற்பயிற்சியும் அவனைக் கைவிட்டு விடவில்லை.

பயன் தரத் தொடங்கியது பயிற்சி. வாடி வதங்கிய கால்கள் வாட்டம் நீங்கின. வலிமை பெற்றன. எழுந்து நிற்கத் தொடங்கினான் சிறுவன். ஓடத் தொடங்கினான். அவன் கால்களுக்கு உடற்பயிற்சி அபார சக்தியை அளித்து விட்டது. நிற்க முடியுமா என்ற நினைவிலே நிறுத்திக் கிடந்த அவனது கால்களுக்கு, அசுர சக்தி தான் வந்து விட்டதோ என்னவோ, அவனது சாதனைகள் அப்படித்தான் வெளிவந்து கொண்டிருந்தன.

'விளையாட்டு என்பது உடல் வலிமையின் வெளிப்பாடு' தானே! வலிமை பெற்ற அந்த வாலிபனும் விளையாட்டுக்களில் ஈடுபட்டான். 1900ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் மட்டுமல்ல, 1904ம் ஆண்டும், 1908ம் ஆண்டும் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் நின்று கொண்டே உயரத்தாண்டல் (Standing High Jump), நின்று கொண்டே நீளத்தாண்டல், நின்று கொண்டே மும்முறைத் தாண்டல் (Hop Step & Jump) எனும் மூன்று நிகழ்ச்சிகளிலும் வெற்றி பெற்றுத் தங்கப் பதக்கங்களை பெற்றான்.

நின்று கொண்டே உயரத் தாண்டும் போட்டியில் 5 அடி 5 அங்குலம் உயரத்தைத் தாண்டி, உலக சாதனையையே நிகழ்த்தினான். ஒலிம்பிக் வரலாற்றிலேயே இதுவரை 10 தங்கப் பதக்கங்களை யாரும் வெல்லவில்லை. இவனே வென்றான். அவனை எல்லோரும் மனிதத் தவளை (Human Frog) என்றே செல்லப் பெயரிட்டு

அழைத்தனர். ஆனால் அவனது உண்மையான பெயர் ராய் எவ்ரி என்பதாகும்.

இளம்பிள்ளை வாதத்தை மட்டும் வெல்லாமல், எதிரே யாரும் போட்டியிட இல்லை என்று மூன்று ஒலிம்பிக் பந்தயங்களில் வென்று, இவனைப் போல் ‘இனி ஒருவர் இல்லை காண்’ என்று வரலாற்றாசிரியர்கள் புகழும் வண்ணம் வரலாறு சமைத்த ராய் எவ்ரியின் முயற்சியைப் பாருங்கள். நமக்கெல்லாம் ஓர் நல்ல முன்னோடி அல்லவா!

# வாழ்க நின் வலிமை!

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏன் ஒலிம்பிக் பந்தயம் நடந்து வருகிறது என்ற கேள்விக்கு, கிரேக்க நாட்டில் உலவி வரும் கதை ஒன்றைப் பதிலாகக் கூறுவார்கள்.

ஒலிம்பிக் பந்தயம் தொடங்கிய காலத்துக் கதை இது. புனிதமான ஓட்டப் பந்தயங்களில் அல்லது மல்யுத்தப் போட்டி ஒன்றில் வெற்றி பெற்ற பெண் ஒருத்தி, அந்நாட்டின் ராணியாகிவிடுவது மரபாக இருந்து வந்தது.

ஒரு முறை ராணியாகிவிட்டால், இறக்கும் வரை அவளே ராணியாக இருப்பாள் என்பதும் சம்பிரதாயம். ஆண்களுக்கான ஓட்டப் பந்தயங்களில் வெற்றி பெறுகிற வீரனையே, அந்த ராணி மணந்து கொண்டு, மன்னனாக்கி விடுவாள்.

49 அல்லது 50 முழு நிலாக் காலம் முடிவடைந்த பிறகு, மீண்டும் ஒரு விளையாட்டுப் பந்தயம் நடக்கும். அதில், கிரேக்க நாட்டு வீரர்கள் அனைவரும் கலந்து

கொள்வார்கள். நான்காண்டு காலம் மன்னனாக வாழ்ந்த வீரனும், போட்டியில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெறுகிற வீரனையே ராணி தன் கணவனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வாள். தோற்றுப் போகின்ற பழைய மன்னன் கதி என்ன வாகும் என்றால், இரண்டு காரியங்களில் ஒன்றை அவனே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒன்று தலைமைக் கடவுள் பீடத்திலே தன் தலையை வைத்துத் துண்டிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். அல்லது மலை உச்சியில் வைத்துத் தள்ளிவிடும்படி மன்றாடலாம்.எப்படியும் அவன் இறக்க வேண்டியவனே.

இவ்வாறு இந்திராணியாக அந்த ராணி சிரஞ்சீவியாக வாழ, நான்காண்டுகளுக்கு ஒரு முறை பழைய வீரன் கொல்லப்பட, புதிய வீரன் மாலை சூட என்ற வழக்கம் இருந்து வந்ததாம்.

நான்காண்டுகளுக்குள் ஒரு வீரனின் அல்லது மனிதனின் பலம் குறைந்துபோய்விடுகிறது என்ற கிரேக்கர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்த, இந்தக் கதை உருவாக்கப்பட்டதோ அல்லது உண்மையாக நடந்ததோ நாமறியோம். வரலாற்றிலே இக்கருத்து காணப்படுகிறது. அந்த அடிப்படையில்தான், நான் காண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் பந்தயங்கள் கிரேக்க நாட்டிலே நடத்தப்பெற்றன.

அதே கிரேக்க வரலாற்றில், மிலோ என்ற மல்யுத்த வீரன் தொடர்ந்தாற்போல் 6 ஒலிம்பிக்

பந்தயங்களில் வெற்றி வீரனாக விளங்கினான் என்ற ஓர் குறிப்பினையும் நம்மால் காண முடிகிறது.

படிக்கின்ற கருத்திலே, பற்றும்பிடிப்பும் இல்லாமல் போகலாம் என்பதனாலோ என்னவோ, நாம் வாழ்கின்ற காலத்திலேயே வலிமை மிக்க மிலோ போன்ற வீரன் ஒருவனைக் காண்கிறோம். அவனது ஆற்றல்மிகு சாதனையைப் பார்த்து வியந்து மகிழ்கிறோம்.

19 வயது இளைஞனாக மெல்போர்ன் ஒலிம்பிக் பந்தயப் போட்டிக்கு 1956–ம் ஆண்டு வருகிறான். தட்டெறியும் போட்டியில் ஒலிம்பிக் சாதனை செய்து தங்கப் பதக்கம் பெறுகிறான். 23 வயது இளைஞனாக 1960ம் ஆண்டு ரோம் நகரில் நடக்கும் ஒலிம்பிக் பந்தயத்திற்கு வருகிறான். 194 அடி 2 அங்குலம் எறிந்து புதிய சாதனை நிகழ்த்தி, தங்கப் பதக்கத்தோடு செல்கிறான்.

27 வயது வீரனாக 1964ம் ஆண்டு டோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் பந்தயத்திற்கு வருகிறான். 200 அடி $1\frac{1}{2}$ அங்குலம் எறிந்து வெற்றி வீரனாகச் செல்கிறான்.

திருமணம் நடக்கிறது. விமானக் கம்பெனியில் பணிபுரிகிறான். சாதாரண மனிதனுக்குரிய அன்றாட செயல் முறைகளிலும் ஈடுபடுகிறான். என்றாலும் தன் குறிக்கோளை மறக்கவில்லை. உடல் வலிமையை இழக்கவில்லை.

31 வயது விவேகம் நிறைந்த வீரனாக மெக்சிகோ நகரில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்திற்கு வருகிறான். 212 அடி $6\frac{1}{2}$ அங்குலம் தட்டெறிந்து உலக சாதனை புரிந்து உலகையே வியப்பில் ஆழ்த்திவிடுகிறான்.

அந்த அமெரிக்க மாவீரனின் பெயர் ஆல்பிரட் ஓர்ட்டர் என்பதாகும். திருமண வாழ்க்கை அவனை திசை திருப்ப முடியவில்லை. பணிபுரிந்த உத்தியோக வாழ்க்கையால் அவன் கவனத்தை மாற்றமுடியவில்லை. ஏறிக் கொண்டிருக்கும் வயதும் அவனது வலிமையை இறக்கிவிட முடியவில்லை. 1968ம் ஆண்டு மெக்சிகோ நகரில், தோள்பட்டையில் காயமுற்றதற்காக, இரும்புக் காலரை அணிந்து கொண்டு தட்டினை எறிந்துதான் வெற்றி பெற்றான். அந்த காயமும் வேதனையும் கூட அவனது வெற்றியை மாற்றியமைக்க முடியவில்லை.

16 ஆண்டுகள் தொடர்ந்தாற்போல், 4 ஒலிம்பிக் பந்தயங்களில் தட்டெறியும் போட்டியில் வெற்றி பெற்று, தங்கப் பதக்கத்தைக் கொண்டோடிச் சென்ற மாவீரன், 1972, 1976ம் ஆண்டு நடந்த போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை. காரணம் பயமல்ல! வலிமை குறைந்து போய்விட்டது என்பதனாலும் அல்ல! பிறகு ஏன் கலந்து கொள்ளவில்லை?

"தொடர்ந்து வெற்றி பெற்றுக் கொண்டே வந்தால், போற்றுவதற்குப் பதிலாக மக்கள் வெறுக்கத் தொடங்கிவிடுவார்களோ என்ற அச்சம்தான்" என்று ஆல்பிரட் ஓர்ட்டர் கூறுவதைக் கேட்கும்போது, பதில் சரியானதுதான் என்று தோன்றுகிறது.

1980ம் ஆண்டு மாஸ்கோவில் நடக்க இருக்கும் ஒலிம்பிக் பந்தயத்தில் மீண்டும் தட்டெறியும் போட்டியில் கலந்துகொள்ள விரும்புகின்ற ஓர்ட்டருக்கு அப்பொழுது வயது 43 ஆக இருக்கும்.

'வயது என் செயும், வளையம் வரும் முதுமை என் செயும்? நயமாய் உடல்தனை நாளெல்லாம்

# உழைத்தேன்! உயர்ந்தேன்!!

வேளாண்மைத்துறையில் பட்டதாரியாக விரும்பி வந்த அந்த இளம் நங்கை, ஓய்வு நேரத்தை உல்லாசமாகக் கழிக்க, நகர்வலம் சென்று கொண்டிருக்கிருள். எதிரே, ஓட்டப்பந்தய மைதானம் ஒன்று தென்படுகிறது. என்ன நடைபெறுகிறது என்று பார்ப்பதற்காக எட்டிப்பார்க்கிருள் ஆவலிஞல்.

பெண்களின் தட்டெறியும் போட்டி நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பொழுது உலகப் புகழ் பெற்று ஒப்பற்ற வீராங்கனையாகத் திகழ்ந்த டமாராபிரஸ் (Tamara press) என்பவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

பேச்சுத் தொடர்பு நட்பாக மலர்கிறது. பலமுறை பேசிப்பேசி, டமாரா பிரஸ்ஸின் வீரதீரச் செயல்களை செவிமடுத்த பிறகு, அந்த இளம் மங்கையின் இதயத்திலே திடீர்த் திருப்பம் மின்னி பளிச்சிடுகிறது. வேளாண்மைத்துறைக் கல்வியை தூர விலக்கிவிட்டு, விளையாட்டுத்துறைக் கல்வியில் சேர்ந்து கொள்ளும்

காத்திடின்' என்று பாடத் தோன்றுகிறது ஓர்ட்டரைப் பார்த்து.

பயிற்சியும் பழக்கமும் இல்லாமல், இடையிலே எட்டு ஆண்டுகள் பந்தயங்களில் கலந்து கொள்ளாமல் இப்பொழுதும் 198 அடிக்கு மேல் எறியக் கூடிய ஆற்றல் பெற்று விளங்கும் ஆல்பிரட் ஓர்ட்டரைப் பார்த்து, 'வரலாற்றுக் கதாநாயகனாக விளங்கும் மாவீரனே! வாழ்க நின் வலிமை! என்று வாழ்த்தத் தோன்றுகிறது அல்லவா!

வாழ்க நின் வலிமை என்று வாழ்த்துவோம். வல்லமை மிக்க வீரனைப் போல் நம் நாட்டிலும் ஒரு சிலர் தோன்ற, காலம் கருணையுடன் வழியமைக்கட்டும் என்று சிரம் தாழ்த்துவோம்!

வலிமையும் வல்லமையும் தர இறைவனை வேண்டுவோம்.

சென்றபோது, அந்தப் பெண்ணைப் பின் தொடர்வாருக்கும் பெரிதும் துன்பமே மிகுதியாகப் போயிற்று.

5 ஆண்டுகளுக்குள்ளே 10 முறை, தன்னுடைய உலக சாதனையை உலக வரலாற்றிலேயே மாற்றி மாற்றி எழுதும் வண்ணம் வெற்றிபெற்று பெரும் சாதனை புரிந்தாள். 1971-ம் ஆண்டிலிருந்து 1974-ம் ஆண்டிற்குள்ளே சோவியத் நாட்டின் வெற்றி வீராங்கனையாக இரண்டு முறையும், ஐரோப்பா தேசத்தின் வெற்றி ராணியாகவும், 1972-ம் ஆண்டின் ஒலிம்பிக் பந்தயத்தின் தங்கப்பதக்கம் பெறுபவளாகவும் பெற்ற வெற்றிகள் கற்பனைக்கும் எட்டாத அற்புதமல்லவா!

229 அடி 4 அங்குல தூரம் எறிந்து உலக சாதனையை தட்டெறியும் போட்டியில் பொறித்திருக்கும் அந்தப் பருவ மங்கையின் பெயர் ஃபெய்னு மெல்னிக் (Fayina Melnik) என்பதாகும். உலக வரலாற்றிலேயே 70 மீட்டர் தூரத்தை முதன்முதலாக எறிந்தவர் என்ற பெரும்புகழைப் பெற்றிருக்கும் பெய்னு பிறந்த ஊர், சோவியத் நாட்டிலே உக்ரேய்னியன் எனும் பகுதியில் உள்ள பகோடர் எனும் சிறு கிராமம். பிறந்த நாள் 1945-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் தேதியாகும்.

கிராமப்புற கன்னியாக விளங்கிய மெல்னிக், பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு, கல்லூரிக் கல்விக்காக உக்ரேனியத் தலைநகரிலே கீவ் என்ற நகருக்கு வந்த போதுதான், இந்த அதிசயம் நடந்தது. விரும்பிய விளையாட்டை வெறும் வாய்ப்பேச்சோடு நிறுத்திவிடவில்லை. ஆழ்ந்த அக்கறையுடன் நிதர்சனமான நம்பிக்கையுடன், பூமியும் வெட்கும் பொறுமையுடன் உழைத்தார் மெல்னிக். 5 ஆண்டுகளுக்குள்ளே அகிலமே வியக்கும் வண்ணம் அரிய சாதனை புரிந்த மெல்னிக்,

வேட்கையும் விருப்பமும் மேலிடுகிறது. ஆர்வந்தானே அனைத்துக்கும் வழிகாட்டி!

தட்டெறியும் போட்டிக்குத் தயார் செய்ய தன்னை ஆட்படுத்திக் கொள்கிருள் அந்த மங்கை. தினந் தோறும் பயிற்சிகள் கடுமையாகவும் விமரிசையாகவும் தொடர்கின்றன. நாள்தோறும் தட்டெறியும் திறமை யும் வலிமையும் நயமுடன் பெருகிக்கொண்டே வரு கின்றன. 1970-ம் ஆண்டு, அமெரிக்காவிற்கும் ரஷ்யா விற்கும் இடையே நடந்த ஓட்டப் பந்தயங்களுக்கான போட்டிகளில், ஒரே பரபரப்பு.

இதுவரை யாருடைய கவனத்தையும் ஈர்க்காத ஒரு இளம் பெண், 25 வயது நிரம்பிய எழில் மங்கை, அந்தப் போட்டியின்போது புகழ் மேடையில் புளகாங் கிதத்துடன் நிற்கிருள். இரு நாடுகளின் பிரதிநிதியாக வந்திருந்த பெரும் புகழும் திறமையும் படைத்த டமாரா தானிலோவா, இரிஞசோலன்ட்சேவா போன்ற பெண் மணிகளை பின்னடையச் செய்து, தங்கப்பதக்கத்தைத் தட்டிச் சென்று விடுகிருள்.

அத்துடன் நின்று விடவில்லை. 57·96 மீட்டர் தூரம் எறிந்து உலக மேடையில் பவனி வரத் தொடங்கிய அந்த இளம் வீராங்கனை, 5 ஆண்டு களுக்குள் 12 மீட்டர் தூரம் அதிகமாக எறிகின்ற ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் அளவுக்கு அற்புதமாக உழைத்திருக்கிருள்.

எறிகின்ற தூரம் எண்ணுவோரின் கற்பனையை யும் கடந்து சென்று கொண்டிருந்தது. 1971-ம் ஆண்டு 63·96 மீட்டர் தூரம். 1972-ம் ஆண்டு 67·32 மீட்டர் தூரம் என்று எறியும் தூரம் ஏறிக்கொண்டே

பயிற்சி செய்யும்போது 73 மீட்டர் தூரம் எறிந்து காட்டியதைக்கண்ட விளையாட்டுத் துறை வல்லுநர்கள், இந்த அதிசய வீராங்கனையால் மேலும் அற்புத சாதனைகளை நிறுவமுடியும் என்றே நம்புகின்றார்கள்.

1980ஆம் ஆண்டிலே மாஸ்கோவிலே நடக்கும் ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்துகொள்ளப் போகிறேன் என்கிறார். அந்த நாளிலே 35 வயதாக இருக்கப்போகும் மெல்னிக் 'வயது என்னை ஒன்றும் செய்து விடாது' என்று ஆர்வத்துடன் பேசுகின்றாள்.

உலக அரங்கிலே பெண்களுக்கான தட்டெறியும் நிகழ்ச்சி என்றால், ஃபெய்னு மெல்னிக்கின் நினைவு வராதவர்களே இல்லை எனலாம். குறைந்த காலத்திலேயே, பேரளவில் பெரும் சாதனைகளை நிகழ்த்திய பெண்மணியைக் கேட்கிறவர்களுக்கு, 'உழைப்பே உயர்வின் ரகசியம்' என்று கூறுகிறாள். அந்த ரகசியமானது' உழைத்தேன்! உயர்ந்தேன்! என்பது தானே!

'எந்தப் பணியிலும் இதயம் விரும்பி ஈடுபட்டால், இனிய தியாகங்களைச் செய்துவிட்டால் எண்ணியது கைகூடும்' என்ற பொன்மொழிக்கு உண்மையான சான்றாகத் திகழும் பெய்னு மெல்னிக்கின் உழைப்பையும் முயற்சியையும் நம் நாட்டு இளைஞர்களும் சிறுமிகளும் பெற்றுக்கொண்டால், தமிழகம் தரணியில் தலை சிறந்த நாடாகத் திகழும் என்பது சொல்லாமலே விளங்கும், சுகந்தரும் மொழியாகும்.

# புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அதோ! ஒரு 68 வயது இளைஞர் ஓடுவதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்.

ஏதோ தவறு செய்துவிட்டு, தப்பிப் பிழைப்பதற்காக அவர் தன்னை தயார்செய்து கொண்டிருக்கிறாரோ என்னவோ என்றுகூட நீங்கள் நினைக்கலாம்!

யாரிடமோ ஒருவரிடம் பேச்சு வாக்கில் சவால் விட்டுவிட்டு, அந்தச் சவாலை நிறைவேற்றுவதற்காக ஓட முயற்சித்துக் கொண்டிருக்கிறார் என்றுகூட நீங்கள் நினைக்கலாம்!

அவரைச்சுற்றிப் பலர் வியப்போடு வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். அதனால், அவர்கள் மத்தியிலே, சுலபமாகப் புகழ்பெற்று பிரபலமாகி விடலாம் என்பதால், ஓடப்போகிறார் என்றுகூட நினைக்கலாம்!

68 வயது ஆளுக்கு ஏன் இந்த ஓட்டவேலை? அதுவும் வேண்டாத வேலை என்றுதானே நினைக்கிறீர்கள்!

ஓடுவது பொழுதுபோக்குக்காக என்பதுகூட அல்ல! அவர் ஓட இருப்பது தனது பிறந்த நாளுக்காக! ஆச்சரியமாக இல்லையா!

பிறந்த நாள் என்றால் எண்ணெய் தேய்த்து நீராடி, புத்தாடை சூடி, அறுசுவை விருந்து உண்டு, ஆனந்தமாகக் கொண்டாடி, சுற்றத்தோடும் நண்பர்களோடும் பேசி மகிழ்ந்து, அந்த நாளை சினிமா, டிராமா, பீச், சுற்றுலா என்று கழிக்கின்ற நம்மவர்க்கு, பிறந்த நாள் அன்று ஒருவர் ஓடுகின்றார் என்றால் ஆச்சரியமாகக் கூடத் தெரியவில்லை. பைத்தியக்காரத்தனமாக அல்லவோ நமக்குத் தோன்றுகிறது!

ஜாய்ராய் (Joie Ray) என்ற அந்த 68வயது இளைஞர், ஒரு மைல் தூர ஓட்டத்தைத் தனது பிறந்த நாளன்று ஓடிக் காட்டுகிறார். தனது 20வது வயதில் ஒரு மைல் ஓட்டத்தை 4 நிமிடம் 12 வினாடிகளில் ஓடி முடித்து உலக சாதனையை நிகழ்த்திய வீரர் அவர். அதாவது, 4 நிமிடம் 20 வினாடிகளுக்குள் ஒரு மைல் ஓட்டத்தை முதன் முதலாக ஓடி முடித்த வீரர். அந்த சாதனையையும் 46 தடவைகளுக்குமேல் செய்துகாட்டியவர். மாபெரும் வீரர். 15 ஆண்டுகள் தொடர்ந்து ஓட்டப் பந்தயத்தில் வெற்றி கண்டவர். வெகுமதி பெற்றவர்.

தனது பிறந்த நாள் வரும்பொழுதெல்லாம் தனது பிறந்த நாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட, ஒரு மைல் தூரம் ஓடி, தனது தேகத்தின் வலிமையைத் தானே சோதனை செய்து பார்த்துக்கொள்வதுடன், வலிமையாக உடலை வைத்திருக்க உதவும் ஆண்டவனுக்கும் நன்றி செலுத்துவதற்காகவும் கூட அவர் செய்தார்.

அவரது பிறந்தநாள் ஏப்ரல் 13ந் தேதி வரும். அன்று ஒரு மைல் தூர ஓட்டம் நடக்கும். 20வது வயதில் 4 நிமிடம் 12 வினாடியில் ஓடினார் என்று நமக்குத் தெரியும். தனது 60ஆம் வயது பிறந்த நாளில் ஒரு மைல் தூர ஓட்டத்தை 6 நிமிடங்களுக்குள் ஓடினார். தனது 68ஆம் வயது பிறந்த நாளன்று 6 நிமிடம் 18 வினாடிகளில் ஓடினார். 70 வயதிலும் ஓடினார்.

70 வயது இளைஞரின் இனிய சாதனையைப் பாருங்கள்.

**ஆங்காரப் பொக்கிஷம், கோபக் களஞ்சியம், ஆணவ அரண்மனை, பொய் வைத்தக் கூடம், பொருமைப் பெருமதில், காம விலாசம், கந்தல் கடிமனை, காற்றுத் துருத்தி, ஊற்றைச் சடலம், ஓட்டைத் துருத்தி, உடையும் புழுக்கூடு, ஊன் பொதிந்த காயம்** என்று நமது உடம்பைப்பற்றி பட்டினத்தார்போன்ற சித்தர்கள் பாடிச்சென்றார்கள். அதுபோல் நாம் ஏன் நினைக்கவேண்டும்? வேறுவிதமாக நினைப்போமே! அழகாக, அருமையாக!

**தெய்வம் வாழும் இல்லம் திறமை வளர்க்கும் தேன் நிலம், தென்றல் தவழும் சுந்தரப் பூங்கா, கேட்டதைத்தரும் கற்பகத் தரு, வளமை நிறைந்த வல்லாளர் பூமி, சொர்க்கத்தைக்காட்டும் சுந்தரத் தோழன்** என்றெல்லாம் நாம் நினைக்கலாமே!

எந்த உயிர்க்கும் கிடைக்காத அரிய பிறவியாம் மனிதப் பிறவியைப் பெற்றிருக்கிறோம் நாம். எந்தப் பிறவிக்கும் கிடைக்காத எழிலார்ந்த தேகத்தை மனித இனமாகிய நாம் பெற்றிருக்கிறோம். அளப்பரிய ஆற்றலை, ஆண்மையை, அறிவினை, அற்புத சக்தியை நமக்கு ஆண்டவன் அளித்திருக்கிறான். தெளித்திருக் கிறான்.

'வருடம் ஒன்று போனால் வயதொன்று போய் விட்டது. வாலிபம் வழி நடந்து சென்றுவிட்டது.

முதுமை முதுகேறி அமர்ந்துவிட்டது. வரும் நாளெல்லாம் முதுமை—கொடுமை' என்று நினைக்கின்ற நம் மனத்தை சற்று நகர்த்தி வைத்துவிட்டு அருமையான தேகத்தை அறிவுடன் காத்துக் கொண்டாலும், வயதாக ஆக, வலிமையோடுமட்டுமல்ல இளமையோடும் வாழமுடியும் என்றல்லவா வரலாற்றுக் குறிப்புக்கள் வழிகாட்டுகின்றன.

இங்கிலாந்தைச் சேர்ந்த **பாஸ்டர் பவல்** என்னும் ஓட்டக்காரர், 50 மைல் தூரத்தை 7மணி நேரத்தில் ஓடினார் வாலிபத்தில். தனது 39ஆம் வயதில் 402 மைல் தூரத்தை 5 நாட்கள் 18மணி நேரத்தில் ஓடி முடித்தார். தனது 43ஆம் வயதில் 112 மைல் தூரத்தை 24 மணி நேரத்தில் ஓடிக்காட்டினார்.

தன்னுடைய 57ஆம் வயதில் மீண்டும் 402 மைல் தூரத்தை பந்தயம் கட்டிக்கொண்டு 6 நாட்களில் ஓடிக் காட்டினார். தனது 60ஆம் வயதில் 402 மைல் தூரத்தை முன்போலவே 5 நாட்கள் 15¼ மணி நேரத்தில் ஓடினார் என்று வரலாற்று நிகழ்ச்சியைப் படிக்கும் போது, மனிதனால் முடியும் என்றுதானே நம்மால் ஒரு முடிவுக்கு வரமுடிகிறது.

'வலிமையாக, இளமையாக, இனிமையாக, வாழ முடியும் என்பது, உடலை ஒழுங்காகப் பாதுகாத்தால் பெறலாம்' என்ற ஓர் இனிய கருத்தைப் புத்தாண்டு நினைவாகக் கொள்வோம். வீணே உடலை வாட்டாமல், பொழுதைப் போக்காமல், பலப்பல நினைவுகளுடன் போராடாமல், **உடலைக் காப்போம், அறிவை வளர்ப்போம், மகிழ்வுடன் இருப்போம்** என்று உறுதி எடுப்போம்.

இத்தகைய செம்மாந்த நினைவுகளை சிந்தித்தவாறு, தேகத்தைக் காக்கும் சீராளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சக்தியின் சாதனை!

அந்த இளைஞனுக்கு ஓட்டப் பந்தயங்களில் அவ்வளவாக அனுபவமில்லைதான். என்றாலும், இளமையின் வேகத்தில், கரைபுரண்டு காட்டாறாக ஓடுகின்ற உற்சாகத்தின் எழுச்சியில், தன் நாட்டிலே ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு வெற்றி பெற்று, வெற்றி வீரனாகிவிட்டக் காரணத்தால், ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்கின்ற வாய்ப்பினையும் பெற்று விட்டான்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் 17வயது மாணவனுக்கு எவ்வளவு பெரிய வாய்ப்பு பார்த்தீர்களா! 1912ம் ஆண்டில், ஸ்வீடன் நாட்டில் உள்ள ஸ்டாக்ஹோம் எனும் இடத்திலே நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில்தான், அந்த இளைஞன் இவ்வரிய அதிர்ஷ்டம் நிறைந்த வாய்ப்பினைப் பெற்றான்.

அந்த இளைஞனுடன் அனுபவம் நிறைந்த இன்னொரு பெரிய வீரனும் இருந்தான். தான் ஓடுகின்ற 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் எப்படியாவது வென்று, தங்கப்பதக்கத்தைக் கொண்டு சென்றுவிட வேண்டும் என்ற தணியாத பேராவலுடன் அவன்

தடுமாறிக் கொண்டிருந்தான். அந்த வீரனின் பெயர் **மெல்வின் ஷெப்பார்டு** (Melvin Shappard) என்பதாகும்.

பள்ளிக்கூட மாணவனுன. **ஜேம்ஸ் மொர்டித்** எனும் அந்த இளைஞனை அருகில் அழைத்தான். அவன் காதருகில் தன்னுடைய திட்டத்தை மிகவும் ரகசியமாகக் கூறினுன். விவரம் புரியாத ஜேம்ஸ் மொர்டித்தும், அனுபவம் உள்ள தன் தாயகத் தோழன் கருத்துக்குச் செவி கொடுத்ததும் இல்லாமல், சம்மதத்திற்கும் தலையாட்டி விட்டான். தன் தந்திரம் பலித்ததென்று மெல்வின் ஷெப்பார்டும் துள்ளித் திரிந்தான். மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சிக்கிடையே போட்டி நடைபெறும் நாளும் வந்தது.

போட்டி தொடங்குவதற்கு முன், பள்ளிக்கூட மாணவனைப் பார்த்தான் மெல்வின் ஷெப்பார்டு. சரியென்று கண்ணசைவில் சம்மதத்தைக் காட்டுவிட்டு, பந்தயத்திற்குத் தயாராகி விட்டனர் இருவரும்.

நடக்க இருக்கின்ற பந்தய நிகழ்ச்சியோ 800 மீட்டர் ஓட்டம். அதில் ஒரே மூச்சில் விரைவாக ஓடுகின்றவர்களுக்கே வெற்றி கிட்டும். அதில், முதலாவதாக ஓடுகின்றவர்கள், தொடக்கத்திலேயே அசுர வேகத்தில் ஓடி கொஞ்ச தூரம் சென்றதும், களைத்துப் போய் ஓட முடியாமல், போட்டியிலிருந்தே விலகிப் போய் நின்றுவிடுவார்கள். அந்த வீரனைப் பின்பற்றிப் போகின்ற மற்ற வீரர்களும், விவரம் பின்னுல் புரிந்து, வேதனையுடன் ஓட முடியாமல் ஓடி முடிப்பார்கள். இது அன்ருடம் நடக்கக்கூடிய அவல நிகழ்ச்சியாகும்.

மெல்வின் ஷெப்பார்டினுடைய திட்டமும் இதுதான். போட்டி தொடங்கிய உடனேயே, ஜேம்ஸ்

மெர்டித் வெகு வேகமாக ஓடத் தொடங்கிவிட வேண்டும். எல்லோரும் அந்த வேகத்திற்கு இணையாக ஓடி, களைத்துப்போய் விடுவார்கள். ஆனால், தான் மட்டும் தன்னுடைய பயிற்சியில் கடைபிடித்த வேகத்துடனே ஓடி, முதலாவதாக வந்துவிட வேண்டும் என்பதுதான்.

ஜேம்ஸ் மெர்டித்துக்கும் தெரியும். இருந்தாலும், தன் தோழன் வெற்றி பெற்றால், தன் நாட்டுக்குத் தானே அந்தப் பெருமை போகிறது, தங்கப் பதக்கம் வருகிறது என்ற தாயகப் பற்றினால்தான் அந்த யோசனையை ஏற்றுக்கொண்டான்.

ஓட்டப் பந்தயம் தொடங்கிவிட்டது. ஏற்பாட்டின் படியே, ஜேம்ஸ் வேகமாக ஓடத் தொடங்கினான். எல்லோரும் அவன் பின்னே ஓடினார்கள். மெல்வினுக்கு மகிழ்ச்சிதான். அவனும் ஓடிக்கொண்டிருந்தான். தன் திட்டம் பலிக்கிறது என்ற தன்னம்பிக்கையில் ஓடிக் கொண்டிருந்தான்.

என்றுமில்லாத புதிய வேகத்தில் ஓட்டத்தைத் தொடங்கிய ஜேம்ஸ் மெர்டித்தும், ஓடிக்கொண்டேதான் இருந்தான். அதாவது, அனைவருக்கும் முன்னாலேதான் ஓடிக்கொண்டிருந்தான். 'தான் களைத்துப் போவோம். பின் தங்கி விடுவோம். தன் தாயகத் தோழன் முதலாவதாக வந்துவிடுவான்' என்ற நினைவுடன் தான் அவனும் ஓடிக் கொண்டேயிருந்தான்.

என்ன நிகழ்ந்ததோ தெரியவில்லை, எந்த சக்தியின் தூண்டுதலோ தெரியவில்லை. அவன் களைக்கவுமில்லை, ஓட்டத்தில் சளைக்கவுமில்லை. பின் தங்கவும் இல்லை. முதலாவதாகவே ஓடி முடித்துவிட்டான். தங்கப் பதக்கத்தையும் பெற்றுவிட்டான்.

திட்டம்போட்ட ஷெப்பார்டு இரண்டாம் இடத்தையே பெற முடிந்தது. குறுக்கு வழியில் வெற்றி பெறலாம் என்று பகடைக்காய்போல் ஒரு வீரனைப் பயன்படுத்த, பலிகொடுக்க முனைந்த ஷெப்பார்டு தோற்று, இரண்டாம் இடத்தையே பெற முடிந்தது.

'தான் தோற்றுப் போனாலும் பரவாயில்லை, தனது நாட்டுக்கே தங்கப்பதக்கம் வரவேண்டும்' என்று தியாகத்திற்குத் தயாரான அந்த அமெரிக்கப் பள்ளி மாணவனுக்கோ, தங்கப்பதக்கம் எதிர்பாராமலே கிடைத்துவிட்டது.

'மனிதன் நினைக்கிறான். இறைவன் அழிக்கிறான்" என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி. 'நல்லதை நினைத்தால் நல்லது நடக்கும். தீங்கினை நினைத்தால் தீங்கே பயக்கும்' என்பதும் முதுமொழிதான். குறுக்கு வழிகள் முதலில் வெற்றி தருவதுபோல தோன்றினாலும், இறுதியில் நேர்மையே வெல்லும் என்ற உண்மையைத் தான் இறைவனது சக்தி அவ்வப்போது வெளிப்படுத்து கின்றது.

அத்தகைய அளவிடற்கரிய சக்தியின் சாதனையில் தான் இந்த அகிலமே நடைபோட்டுக் கொண்டிருக் கிறது. நல்லதையே நினைப்போம். நல்லதற்கே திட்ட மிடுவோம். நல்ல பலனையே பெறுவோம்.

இந்த சிந்தனைக்கு விருந்தாகிய உத்தம வீரன் ஜேம்ஸ் மொர்டித் வென்றதையும், வெற்றி பெறக்கூடிய ஆற்றல்மிக்க மொர்வின், குறுக்கு வழியில் சென்ற தால் தோற்ற நிலையையும் நினைத்து, நாம் நமது சக்தி யினைக்கொண்டு சத்திய வழியில் சாதனை புரிவோம் என்று உறுதிகொள்வோம். இது நம்மால் முடியும்! முயன்றால் முடியாதது உண்டோ!

# உயரம் உயர்கிறது!

சிறு கிராமம் ஒன்றில் பிறந்த சிறுமி ஒருத்திக்கு, 'பாலட்' நடனக்காரியாக வேண்டும் என்பது ஆசை. லிக்னைட் வெட்டி எடுக்கும் சுரங்கம் அமைந்துள்ள அந்தக் கிராமப்பகுதியில், பட்டணத்திற்கு அப்பால் அமைந்துள்ள சிற்றூர் பகுதியில் நாட்டிய ஆசிரியைக்கோ, மற்றும் வசதிக்கோ எங்கே போவது?

தனது மூன்று சகோதரிகளுடன் ஆசைக் கனவுகளைப் பங்கிட்டுக் கொண்டதுதான் அவளுக்குத் திருப்தியாக இருந்தது. அவளது ஆசைகள் கனவுகளாகி செயல்வடிவம் பெருமலே போய்விட்டதால், அந்தச் சிறுமி அந்த ஏக்கத்திலேயே ஆழ்ந்துபோய் விடவில்லை. சோர்ந்து விழவுமில்லை.

இயற்கையின் காற்று, நீர், வெளிச்சம், நெருப்பு எல்லோருக்கும் எளிதாகக் கிடைப்பதுபோல, விளையாட்டுதான் அவளுக்கும் மிக எளிதாகக் கிடைத்தது. விருப்பம் விளையாட்டில் அதிகமாக இருந்ததாலும், அது எளிதாகக் கிடைத்ததாலும், அதுவே

அந்தச் சிறுமிக்கு வரப்பிரசாதமாக அமைந்து விட்டது.

குழந்தைகளுக்கான விளையாட்டுப் பள்ளியில் சேர்ந்துகொண்ட அச் சிறுமி, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக உடலால் மட்டுமல்ல, விளையாட்டுத் திறன்களிலும் வளர்பிறையாக வளர்ந்துகொண்டே வந்தாள். 800 மீட்டர் தூரம் ஓடுதல், வேலெறிதல், இரும்புக்குண்டு எறிதல்போன்ற நிகழ்ச்சிகளில்தான் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் எழுச்சியும் இருந்ததேதவிர, வேறெதிலும் இல்லை.

சிறுமிக்குப் பயிற்சியளித்த **எர்கார்டு மைக்** எனும் பயிற்சியாளரே அறிந்துகொள்ள முடியவில்லை அந்தச் சிறுமியின் ஆற்றலை! 15 வயது நிரம்பியபோது, அந்த இளமங்கையின் உயரமோ 1.58 மீட்டர் உயரமே இருந்தது. அப்பொழுது அவள் தாண்டிக் காண்பித்த உயரமானது 1.65 மீட்டர் இருந்தது என்பது எல்லோருக்கும் ஆச்சரியமாகவே இருந்தது. அவளது பயிற்சியாளரும் உயரத் தாண்டும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உற்சாகம் தரத்தொடங்கினாள்.

1972ஆம் ஆண்டு மியூனிக்கில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்து, போட்டியில் கலந்து கொண்டபோது, ஏழாவது இடத்தைத்தான் அடைய முடிந்தது. முதலாவதாக வந்த மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவரான வீராங்கனை, **உல்ரிக் மேபோர்த்** என்பவருக்கும் ஏழாவதாக வந்த மங்கைக்கும் இடையே இருந்த உயரமானது 7 சென்டி மீட்டர் வித்தியாசம் இருந்தது. உல்ரிக் தாண்டிய உயரம் 6 அடி 3½ அங்குலம். (1.92)

'ஏழாவதாக வந்து விட்டோமே, இனி எப்படி முன்னுக்கு வரமுடியும்' என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டு விடவில்லை அந்த மங்கை. தாளாத முயற்சியையும் தணியாத ஆசையையும் பயிற்சியிலே பெருக்கத் தொடங்கிவிட்டாள்.

உழைப்பு வீண்போகவில்லை. உண்மையான முயற்சி அவளைக் கைவிட்டுவிடவில்லை. உல்ரிக் தாண்டிய உயரத்தைவிட 2 சென்டி மீட்டர் உயரம் அதாவது—1.94 மீட்டர் உயரம் தாண்டி, உலக சாதனையை நிகழ்த்தினாள்—1974ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24ந் தேதி பெர்லினில் நடந்த பந்தயத்தில்.

'உலகத்தின் கண்களிலே உயர்ந்த சின்னமாகத் தோன்றத் தொடங்கினாள் அந்த மங்கை. 1974ஆம் ஆண்டிலேயே ரோம் நகரில் நடந்த பந்தயத்தில் 1.95 மீட்டர் உயரம் தாண்டி மீண்டும் உலக சாதனையை மாற்றியமைத்தாள்.

'உலக சாதனையை மாற்றிவிட்டோம். இனி நம்மை யாரும் வெல்லமுடியாது' என்று, தூங்கித் தோற்ற முயல் எண்ணம் கொண்டுவிடவில்லை அவள். 'தன்னை யாரும் வென்றுவிட்டால் என்ன செய்வது' என்ற அடக்கமான அச்சத்திலே, தொடர்ந்து பயிற்சிகளைச் செய்துகொண்டே, தேகத்தை திறமையான நிலையிலே பாதுகாத்துக் கொண்டே வந்தாள். பந்தயங்களிலும் கலந்துகொண்டாள்.

1976ஆம் ஆண்டில் டிரஸ்டன் என்ற இடத்தில் 1.97 மீட்டர் உயரம் தாண்டி, மூன்றாவது முறையாக உலக சாதனையைத் தீட்டினாள். அத்துடன் உயரத்தை நிறுத்திக் கொள்ள முடிந்ததா? அதுதான் இல்லை.

பயிற்சி அளித்த வேகம், அவளை மேலும் உயரத்திற்குக் கொண்டு சென்று, குவலயத்தையே வியப்பில் மூழ்கடித்துவிட்டது.

1977ஆம் ஆண்டு, ஹெல்சிங்கி என்ற இடத்தில் பந்தயங்கள் நடந்தபோது, அந்த மங்கை நிகழ்த்திய அற்புத சாதனை இருக்கிறதே, அது யாருமே எதிர் பார்க்காத ஒன்ருகும். 2 மீட்டர் உயரம் தாண்டி, உலகத்திலேயே முதல் வீராங்கனையாகும் பெரும்பேறு பெற்று விளங்கிஞள்.

கிழக்கு ஜெர்மனியின் தென் கிழக்குப்பகுதி ஒன்றில் லிக்னைட் சுரங்கம் அமைந்துள்ள லோக்சா எனும் சிறு கிராமம் ஒன்றில் தொழிலாளர் குடும்பத்தில், நான்கு பெண்களில் ஒருத்தியாகப் பிறந்த **ரோஸ்மேரி ஆக்கர்மான்** எனும் வீராங்கனை, நன்ருக மனப்பாடம் செய்த பாட்டினைக்கூட தவறில்லாமல் ஒப்புவிக்கத் திணறி நின்ற காலம் ஒன்று. தாழ்வு மனப்பான்மையிலும், தன்னம்பிக்கை இல்லாமலும், வாழ்ந்துவந்த ரோஸ் மேரியின் தாழ்வு மனப்பான்மையை அகற்றி வளர்த்து தன்னம்பிக்கையை, தைரியத்தை ஊட்டியது விளையாட்டுக்கள் தான்.

''விளையாட்டுக்கள் எனக்கு சுயக்கட்டுப்பாட்டையும், தன்னம்பிக்கையையும், உற்சாகமான உணர்வுகளையும் ஊட்டி, எனக்கு இனிய பல ஆற்றல்களை வழங்கின. அதன் மூலமே என்ஞல் எனது அன்ருடப் பணிகளை, அரசாங்க வேலைகளை அழகாகவும் ஒழுங்காகவும் செய்யமுடிகிறது. எல்லோரிடமும் இனிதாகவும் அழகாகவும் பழகமுடிகிறது'' என்று கூறும் ரோஸ்மேரியின் வார்த்தைகள், நமக்கெல்லாம் எவ்வளவு நம்பிக்கையை ஊட்டுகின்றன பார்த் தீர்களா?

உலகத்தின் ஒரு மூலையில் பிறந்த பெண்ணை, உலகத்தின் திலகமாக மாற்றிவைத்த பெருமை விளையாட்டுக்களையே சார்ந்திருக்க, நாம் மட்டும் ஏன் அதனைப் புறக்கணித்துக்கொண்டே போகிறோம் என்பதுதான் நமக்கு புரியவே மாட்டேன் என்கிறது.

உயரம் உயர்கிறது! உயர்ந்துகொண்டு இருக்கிறது. உள்ளத்தில் அந்த வீராங்கனையின் வடிவம் பதிந்து, ஒளிர்ந்துகொண்டே இருக்கிறது! வெற்றியின் சின்னமல்லவா! உழைப்பின் வண்ணமல்லவா! உயர்கின்ற உயரத்தின் உயர்ந்த பட்டியலைப் பாருங்கள் புரியும்.

| வருடம் | வயது | உயரம் |
|---|---|---|
| 1965 | 14 | 1.46 மீ |
| 1967 | 15 | 1.65 மீ |
| 1968 | 16 | 1 71 மீ |
| 1969 | 17 | 1·76 மீ |
| 1970 | 18 | 1·77 மீ |
| 1971 | 19 | 1·81 மீ |
| 1972 | 20 | 1·85 மீ |
| 1973 | 21 | 1.88 மீ |
| 1974 | 22 | 1·95 மீ |
| 1975 | 23 | 1·94 மீ |
| 1976 | 24 | 1·96 மீ |
| 1977 | 25 | 2·00 மீ |

# பாதைக்கேற்ற பயணம் !

காற்றைக் கிழித்துக் கொண்டு கடுவேகமாக ஓடிக் கொண்டிருக்கும் ரயிலின் ஒரு மூலையில், கண்ணீரும் கம்பலையுமாக ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறாள். அவள் கையிலே ஒரு குழந்தை. கம்பளியால் போர்த்தி மூடப் பட்டிருக்கிறது அந்தக் குழந்தை. உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் குழந்தை முகத்தைப் பார்த்துப் பார்த்து, தானும் உயிரிழந்த நிலையில் பிரயாணம் செய்கிறாள் அந்தத் தாய்.

வாழ்க்கையில் வசதியும் வளமும் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவளா என்றால் அல்லவே அல்ல. அமெரிக்க நாட்டில், புகையிலை பயிரிடும் ஒரு எஸ்டேட்டில் கூலியாகப்பணியாற்றும் குடும்பத்தினள். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவளா என்றால் அதுவும் இல்லை. நீக்ரோ இனவழி வந்தவள்.

வாரம் ஒரு முறை 90 மைலுக்கு அப்பால் உள்ள இலவச மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு அல்லல் அடைகின்றாளே! அதுதான் அவளுக்கு முதல்

குழந்தையா? அல்லது குழந்தையே பிறக்காமல் அநேக ஆண்டுகளுக்குப் பிறகு தவமிருந்து பெற்ற தலைக் குழந்தையா என்ருல், அதுவும் இல்லை. அவளுக்கு 19 குழந்தைகள் பிறந்ததில், இந்த நோய்வாய்ப் பட்டிருக்கும் குழந்தை 17வது குழந்தை.

பதினேழாவதாகப் பிறந்த இந்தக் குழந்தை, இந்த உலகத்தைப் பார்க்கத் தொடங்கிய நேரத்திலிருந்தே, பெற்ருேர்களை உபத்திரவப் படுத்திக்கொண்டேதான் இருந்தது. வறுமையின் எல்லைக்கோட்டிலே வதிந்த அந்தக் குடும்பத்தில், உருவெடுத்துத் தோன்றிய அந்த பெண் குழந்தை பிறந்தபோது இருந்த எடை 4½ பவுண்டு தான்.

பிறந்த குழந்தை பிழைக்குமா மரிக்குமா என்ற அச்சமும் கவலையும், பெற்ருேர்களுக்கு முதல் நாளே முளைத்தெழுந்தது என்ருலும், குழந்தை இறக்கவில்லை பேர் தவிர, பிழைக்கின்ற கட்டத்திற்குள்ளும் வரவில்லை. எடை கொஞ்சங் கொஞ்சமாகக் கூடி வந்தாலும், இதயத்தில் தாக்கிவிட்ட சோகம் மாருமலேயே வளர்ந்தது. வறுமையுடன் போராடிய அந்தக் குடும்பம், குழந்தையைக் காக்கவும் போராடியது.

பிழைத்துக்கொள்ளும் என்ற நம்பிக்கை பிறந்த போது, பேரிடி ஒன்று தலையில் விழுந்தது போல, குழந்தையை டபுள் நிமோனியா என்ற விஷஜுரம் தாக்கியது. தாக்கிய விஷஜுரம் கொடுமையான காரியம் ஒன்றைச் செய்து விட்டு ஒதுங்கிக்கொண்டது. அதாவது, கைகளையும் கால்களையும் அசைக்க முடியாத அளவுக்கு இளம்பிள்ளை வாதத்தை உண்டாக்கிவிட்டு, விஷஜுரம் விடைபெற்றுக்கொண்டது.

ஒன்றைத்தயார் செய்து குழந்தைக்குப் போட்டார்கள். 11வது வயதில் நன்ருக நடக்கத் தொடங்கினுள். 13வது வயது வரை, தனியாக உருவாக்கபட்டக் காலணியுடன் நடந்த அந்தப் பெண், மற்ற எல்லோரையும் போல வீதியிலே நடக்கப்பழகினுள்.

எழுந்து நிற்கவும், நடக்கவும், ஓடவும், சக்தி வரப் பெற்ற குழந்தையைக் கண்டு, உற்சாகத்தில் மகிழ்ந்தே போனுள் தாய். இதற்கிடையில் பள்ளிப்படிப்பும் தொடர்ந்தது. பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே விளையாடவும் தொடங்கி விட்டாள். 'கடவுள் கால்களைக் கொடுத்துவிட்டான் நடக்க. இதுவே போதும்' என்று அந்தப் பெண் திருப்தியடைந்து விட வில்லை.

'உலகமே புகழும் வண்ணம், சிறந்த ஓட்டக் காரியாகத் திகழ்வேன்' என்று உறுதி பூண்டாள். நிற்க முடியாமல் நிலைகுலைந்து கிடந்த பெண்ணின் நெஞ்சிலே எழுந்த இந்த உறுதியை, வீட்டின் வறுமையோ, மற்றும் சுற்றுப்புற சூழ் நிலையின் கொடுமையோ தடுத்து நிறுத்திவிட முடியவில்லை.

உடற்பயிற்சிகளை சலிப்படையாமல் தினந்தோறும் செய்தாள். ஓடப் பழகினுள். பயிற்சி பெற்ருள். பள்ளி களில், கல்லூரிகளில் சிறந்த வெற்றிகளைக் குவித்தாள். அவளது ஓட்டவேகத்தைக் கண்டு நாடே வியந்தது. இந்த நிலையில்தான், 1960ம் ஆண்டு ரோம் நகரில் ஒலிம்பிக் பந்தயம் நடக்கவிருந்தது. அமெரிக்கா நாட்டின் பிரதிநிதியாக ஓடுவதற்காக அந்தப் பெண் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

துன்புறும் குழந்தையைப் பார்க்கும் பொழுதெல்லாம், தாயின் மனம் தணலில் இட்ட மெழுகாகக் கரைந்தது.'இந்தக் குழந்தையை எப்படியும் காப்பாற்றியே தீருவேன்!' மனதுக்குள்ளே சபதமிட்டாள் அந்த வீரத்தாய்...அந்தத் தீவிரப்பணியிலேதான், வாரம் ஒரு முறை 90 மைல்களுக்கு அப்பாலுள்ள இலவச மருத்துவ மனைக்குக் கொண்டு சென்ருள்.

வாரக் கணக்கில் போனாலும், மாதக் கணக்கில் பயணம் முடிந்து நோய் குணமாகியிருந்தாலும், வெற்றி என்று கூறலாம். ஆனால், வருடங்கள் பல ஆகியும் எந்த விதமான குணமோ, முன்னேற்றமோ ஏற்படவே இல்லை. தோல்வி முகத்தைப் பார்த்தாலும், தொய்ந்து கிடந்த குழந்தையின் முகத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம், 'பார்த்து விடுவோம் ஒருகை' என்ற துணிவு தொடர்ந்ததே தவிர, ஒதுங்கிப்போய்விடவில்லை.

உறுதியாக இருந்தத் தாய்க்கு இறைவனே அருள் வரம் தந்தது போல, மருத்துவம் மலர் முகம் காட்டத் தொடங்கியது. எட்டு ஆண்டுகள் தொடர்ந்து வைத்தியம் செய்த பிறகு, கைகால்கள் செயலிழந்து போய்க் கிடந்த குழந்தை, தள்ளடியவாறு நிற்கத் தொடங்கியது. கொஞ்சங் கொஞ்சமாக முன்னேற்றம் பெருகியது.

வீட்டிலே படுக்கையிலேயே படுத்துக் கிடந்த குழந்தையானது, வீட்டு வாசலிலே நடக்கத் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் தன் வேலைக்குப் போய்வந்த நேரம்போக,பிள்ளைக்குக் கைகால் பிடித்துத்தடவி பணி செய்தாள் தாய். எட்டாவது வயதில் நடக்கத் தொடங்கியது அந்தக் குழந்தை. கால்களுக்கு வலிமை இல்லை நிற்க. உடலைத் தாங்கிட பொருத்தமான காலணி

முதன் முதலாக 100 மீட்டர் ஓட்டம். உலக சாதனை நேரம் 11 வினாடிகள். அடுத்தது 200 மீட்டர் ஓட்டம் அதிலும் தங்கப் பதக்கம். 400 மீட்டர் தூரம் ஓடுகின்ற தொடரோட்டம். அதிலும் வென்று தங்கப் பதக்கம். மூன்று தங்கப் பதக்கங்களை கழுத்தில் அணிந்து கொண்டு, உலகம் போற்றும் உன்னத வீராங்கனையாக வந்தாள் அந்தப் பெண்.

ரஷ்ய நாட்டினரும் 'ஒலிம்பிக் ராணி' என்று போற்றிப் புகழும் வண்ணம் புகழ் பெற்ற வீராங்கனை வில்மா ருடால்ஃப் என்பது அவள் திருநாமம். விரைவோட்டத்தில் இவ்வளவு சிறப்பாக யாரும் ஓடியதில்லை என்று பெயரெடுத்து, பெற்றோர்களையும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்திய வில்மாவின் வாழ்க்கையைப் பாருங்கள்.

அவள் தேர்ந்தெடுத்தப் பாதை சிறந்த பாதை. விளையாட்டுத் துறையான அந்த ஒப்பற்றப் பாதையில் நடந்தாள். அவளது பயணம் சீராக, சிறப்பாக, பார்த்தவர்கள் புகழ்கின்ற பயணமாக அமைந்தது. உலகப் புகழ் பெற்றாள். 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்கிறாள்.

ஒருவரின் புகழுக்கு பணமோ, பதவியோ, குடும்பப் பாரம்பரியமோ மட்டும் உதவாது. உயர்ந்த லட்சியமும் உண்மையான உழைப்பும், பண்பான பயணமும் பாதையுமே வெற்றி நல்கும் என்று வரலாறு கண்ட வில்மா ருடால்ஃபை நினைத்துக் கொள்வோம். விளையாட்டுத் துறைதரும் சிறந்த பாதைக்கேற்ற பயணத்தை நாமும் தொடர்வோம், பயன் பெறுவோம்.

# தன்மானத் தங்கம்!

''ஒலிம்பிக் பந்தயத்தில் நீ வென்ற தங்கப் பதக்கங்களை எல்லாம் உடனே திருப்பித்தர வேண்டும்' என்ற கட்டளையைக் கேட்ட அந்த வீரனுக்கு, கேட்கவே அதிர்ச்சியாக இருந்தது.

'உலகத்திலேயே நீதான் சிறந்த வீரன்' என்று புகழ் பாடிக்கொண்டே தங்கப் பதக்கங்களை அணி வித்துக் கௌரவித்த ஸ்வீடன் தேசத்து மன்னன் பாராட்டிய வீரனைப் பார்த்தா இப்படி ஒரு கட்டளை? என்று அமெரிக்காவே அயர்ந்து போனது.

ஒரு தங்கப் பதக்கம்கூட வாங்க முடியாத நாடுகள் உலகத்திலே எத்தனையோ இருக்கின்றன. பென்டாத்த லான் எனும் 5 நிகழ்ச்சிப் போட்டிகளிலும், டெக்காத்த லான் எனும் பத்து நிகழ்ச்சிப் போட்டிகளிலும் வெற்றி பெற்று, தங்கப் பதக்கங்களை ஏற்று, தன் தாயகமான அமெரிக்காவிற்கு வானளாவிய புகழை வாரிக்கொண்டு வந்த மாவீரனைப் பார்த்துத்தான், இந்தக் கட்டளை கட்டாரியாகப் பாய்ந்தது.

இதுவரை இப்படி ஒரு சாதனையை யாரும் செய்த தில்லை என்று சாதித்த அந்த மாவீரனின் பெயர் ஜிம்தோர்ப்.

'ஏன் தன்னுடைய தங்கப் பதக்கங்களைத் திருப்பிக் கேட்கின்றார்கள்? என்று விவரம் புரியாமல் விழித்தான் ஜிம்தோர்ப். தங்கப் பதக்கங்களை தனக்கு அணிவிக்கும்போது, ஸ்டாக்ஹோமில் நடந்த 5வது ஒலிம்பிக் பந்தயங்களை வேடிக்கைப் பார்க்க வந்த அத்தனை பேருமே எழுந்து நின்று மரியாதை செலுத்திய காட்சியும், அந்த மாவீரன் மனக்கண் முன்னே வந்து நின்றது.

தங்கப் பதக்கங்களுடன் தன் தாயகமான அமெரிக்கா வந்து சேர்ந்தபோது, அமெரிக்க நாடே முன்னெழுந்து வந்து நின்று மலர்மாரிப் பொழிந்தது போல, வாழ்த்துக்களைப் பொழிந்து வரவேற்ற காட்சியும் அவ்வீரன் நினைவுக்கு வராமல் இல்லை. இன்பம் தராமல் இல்லை.

இந்த நினைவுகளுக்குள்ளே தான், ஏன் தன்னிட மிருந்து தங்கப் பதக்கங்களைக் கேட்கின்றார்கள் என்ற வினாவும் எழுந்து விளையாடிக் கொண்டிருந்தது. அதுவும், தங்கப் பதக்கங்களைப் பெற்று ஓராண்டு கழித்து ஏன் கேட்க வேண்டும் என்பதுதான் அந்த வினாவுக்குள் கிளைத்தெழுந்து தொடர்ந்த வினா, அவனது ஆச்சரியத்தை மேலும் விரட்டியது.

அமெரிக்க இந்தியனான ஜிம்தோர்ப்பின் வெற்றி, அங்கிருந்த ஒரு சிலருக்குப் பிடிக்கவில்லை. வேப்பங் காயாகக் கசந்தது என்றாலும் வெற்றியையும், புகழை யும் குறுக்கே விழுந்து தடுக்க முடியவில்லை. அதனால்,

குறுக்கு வழியில் சென்றேனும் அவனது இன்பத்தைக் குலைக்க வேண்டும் என்று திட்டம் தீட்டிவிட்டார்கள். அந்த சதித் திட்டத்தின் கீழேதான், தங்கப்பதக் கங்களை உடனே திருப்பித்தர வேண்டுமென்ற சட்டம் பிறந்தது. சட்டத்தைப் பிறப்பித்தது அமெரிக்க ஒலிம்பிக் கழகமாகும்.

'ஒலிம்பிக் பந்தயங்கள் நடப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னே, நீ காசு வாங்கிக்கொண்டு தளப்பந்தாட்டம் ஆடியதாகத் தெரிகிறது. அதனால் நீ அமெச்சூர் என்ற அந்தஸ்தை இழந்துவிட்டாய். அமெச்சூர் விளையாட்டு வீரர்கள்தான் ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்துகொள்ள முடியும். ஆகவே, நீ ஒலிம்பிக்கில் வெற்றிபெற்றாலும், வெற்றிவீரன் என்ற பட்டத்தை இழக்கிறாய். தங்கப் பதக்கங்கள் உன்னிடம் இருப்பது தவறு. திருப்பித் தந்துவிடு' என்ற கட்டளையைப் பிறப்பித்து விட்டது கழகம்.

அத்துடன் நில்லாது, அந்தக் கழகத்தின் ஆத்திரக்காரர்கள் மூன்றுபேர் ஒன்று சேர்ந்து, ஸ்வீடன் ஒலிம்பிக் கழகத்திற்கும் கடிதம் அனுப்பி, 'எங்கள் நாட்டு ஜிம்தோர்ப் வெற்றியை ஏற்றுக்கொள்ள வேண்டாம். வெற்றி வீரர்கள் பட்டியலிலிருந்து அவனது பெயரை எடுத்துவிடலாம்' என்றும் சிபாரிசு செய்துவிட்டனர்.

''பணம் வாங்கிக்கொண்டு நான் விளையாடவே இல்லை. இது யாரோ கட்டிவிட்டக் கட்டுக்கதை. என் பெயருக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்றுகூறிய கற்பனை'' என்றெல்லாம் வாதாடிப் பார்த்த வீரனது பேச்சை, கேட்பார் இல்லை. மலையடிவாரத்தில் நின்று கத்தியிருந்தாலும் எதிரொலியாவது வந்திருக்கும். மலை போன்ற மனம் படைத்தவர்களிடம் கத்தி என்னபயன்?

திட்டம் தீட்டி செயல் புரிந்தவர்கள் இறுதியில் வெற்றி பெற்று விட்டார்கள்.

ஜிம்தோர்ப் தனது தங்கப் பதக்கங்களைத் திருப்பித் தந்துவிட்டான். அவனது பெயர் ஒலிம்பிக் வீரர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. செய்யாத தவறுக்குத் தண்டனை, செம்மையாக விதிக்கப்பட்டு, சிறப்போடு நிறைவேற்றப்பட்டும் விட்டது. தன்னோடு ஆடியவர்களின் பெயர்கள் சேர்க்கப்படாமல், தான் மட்டும் பணம் வாங்கியதாகக் கூறப்பட்ட பழியையும் வேதனையுடன் தாங்கிக் கொண்டான் தோர்ப்.

தங்கப் பதக்கங்கள் இரண்டும், ஜிம்தோர்ப்புக்கு அடுத்து வந்த வீரனுக்குக் கிடைக்கவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு விட்டது. அதற்குரிய வீரன் ஸ்வீடன் தேசத்தவன். அவன் பெயர் வீஸ்லேண்டர் என்பதாகும்.

அவனை அணுகி, 'நீயே வெற்றி வீரன். இந்தப் பதக்கங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று கேட்டனர்.

அந்த வீரனோ, தங்கப் பதக்கங்களை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். 1912ம் ஆண்டு ஸ்டாக் ஹோமில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் நான் வந்தது இரண்டாம் இடம்தான். எனக்குரிய பரிசு வெள்ளிப் பதக்கம்தான். என்னையும் பல வீரர்களையும் வென்ற ஜிம்தோர்ப்தான் உலகிலேயே சிறந்த வீரன்.

'இன்னொரு சிறந்த வீரனுடைய தங்கப்பதக்கத்தைப் பெற்று மகிழ்வதைவிட, நான் பெற்ற வெள்ளிப் பதக்கத்தையே மேலாக மதிக்கிறேன். என் உழைப்பில்

கிடைத்த பொருளே உயர்ந்தது. இன்னொருவர் பொருள் எனக்குத் தேவையேயில்லை. அதற்குரியவன் ஜிம்தோர்ப்தான். நானல்ல' என்று ஏற்றுக்கொள்ள மறுத்தான் வீஸ்லேண்டர் என்னும் வீரன்.

தங்கப் பதக்கம் என்றதும் தாவிக் குதித்துக் கொண்டு வந்து, தலை குனிந்து நின்று அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. சிறந்த விளையாட்டு வீரன்தான் அவன் என்று, மாற்றாரையும் மதித்துப் போற்றும் தன்மானத் தங்கமாகத் திகழ்ந்தான் வீஸ்லேண்டர். அதனால்தான் அவன் சரித்திரத்தில் சாகாவரம்பெற்றத் துருவனாகத் திகழ்கிறான்.

வஞ்சகர்கள் விரித்த வலையானது 1913லிருந்து 1973வரை தொடர்ந்தது. 60 ஆண்டுகள் கழித்து, ஜிம்தோர்ப் வெற்றி வீரன்தான் என்று அமெரிக்க ஒலிம்பிக் கழகம் ஏற்றுக்கொண்டு அறிவித்தது. அறிவித்து என்ன பயன்? அதைக் கேட்க அவன் இல்லையே! விளையாட்டுத் துறையில் ஈடு இணையில்லாமல் இருந்த வீரன், இறுதி நாட்களில் வறுமையில் வாடி வதங்கி, மடிந்து போனான். செத்தும் புகழ்பெற்ற ஜிம்தோர்ப் புக்கு மேலாக, வெள்ளிப் பதக்கமே மேல் என்று தங்கத் தைத் தள்ளிவிட்டத் தன்மானத் தங்கமாகத் திகழும் ஸ்வீடன் தேசத்து வீஸ்லேண்டரையும் வணங்குவோம்.

நல்ல குணங்களை வளர்க்கும் விளையாட்டுக்களில், நயமார்ந்த குணாளனாக வாழ்ந்த வீஸ்லேண்டரைப் போல, உலகம் முழுதும் வீரர்கள் தோன்ற வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான இன்பம் விளையாட்டுக்களில் உலவும் என்று நம்பி, தன்மானத் தங்கத்தை வாழ்த்தி மகிழ்வோமாக!

# தனிப்பெருந் தலைவன்!

அருகிலிருந்த அனைவரும் அன்புடன் வேண்டு கோள் விடுத்தார்கள். 'தயவு செய்து விளையாட்டிலிருந்து விலகி வந்து விடுங்கள்' என்று. வேண்டா வெறுப்பினால் அல்ல. அவர் விளையாட்டு, அங்கு வேடிக்கை பார்ப்பவர்களை எரிச்சல் மூட்டி வேதனையை ஊட்டுகிறது என்பதினாலும் அல்ல. அந்த வீரன்மேல் கொண்டிருக்கும் அளப்பரிய அன்பின் காரணமாகத் தான் அந்த ஆணை எழுந்தது.

ஆட்டம் தொடங்கி 4 நிமிடத்திற்குள்ளேயே, ஆட்டத்தை விட்டு வெளியே வாருங்கள் என்றால்,வந்து விடுங்கள் என்று வற்புறுத்தி அழைத்திட வேண்டு மென்றால் ஏதாவது விசேஷம் இருக்குமே! ஆமாம்! அந்த விளையாட்டு வீரன்: அல்ல, அந்த விளையாட்டுக் குழுவின் தலைவனின் கையானது ஆட்ட நேரத்தில் முறிந்து போனதுதான் காரணம்.

அந்தத் தலைவனோ, 'வெளியே நான் வந்தால் என் குழு ஆட்டக்காரர்கள் சோர்ந்து போய்விடுவார்கள். அதனால் ஆட்டத்தில் தோற்றுப்போய் விடுவார்கள்.

அந்தத் தோல்வி என் தாய் நாட்டின் தன்மானத்தை யும் பொன்னான புகழையும் போக்கிவிடும்' என்று கூறிக்கொண்டே மறுத்தான். மறுத்ததோடல்லாமல் விளையாடிக்கொண்டும் இருந்தான்.

அது சாதாரணப் போட்டி அல்ல, ரக்பி ஆட்டம். பந்துக்காக ஒருவர் மேல் ஒருவர் விழுந்து தாக்கி, தள்ளி, அழுத்தி, விரட்டிப்பிடித்து ஆடுகின்ற ஆட்டம் அது. ஆஸ்திரேலியாவிற்கும் கிரேட் பிரிட்டனுக்கும் இடையே நடைபெறுகின்ற போட்டி அது. போட்டி நடைபெறுகின்ற இடமோ பிரிஸ்பேன் என்பதாகும். 1958ம் ஆண்டு ஜூலை மாதம் 5ம் தேதி.

கிரேட் பிரிட்டன் சார்பாகச் சென்ற குழுவின் தலை வனுக்குத்தான், ஆட்டம் தொடங்கிய நான்கு நிமிடங் களுக்குள் கைமுறிந்து விட்டது. கரம் முறிந்து வெளியே வந்து விட்டால், தன் குழுவினரின் 'திறமும் தரமும்' போய்விடும் என்பதால், தன்னுடைய வலியை யும் பொருட்படுத்தாமல் ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடி தன் குழுவினரை உற்சாகப்படுத்திக் கொண்டி ருந்தான் அந்தத் தலைவன்.

இடைவேளை நேரம் வந்தது. அந்தத் தலைவ னுக்கோ கையின் வலி தாங்கமுடியாத அளவுக்கு வளர்ந்து கொண்டே வந்தது. வேதனையைக் குறைப் பதற்காக, வலியைக் குறைக்கும் 'இஞ்செக்ஷனையும்' போட்டுக் கொள்கிறான். காரணம். இன்னும் 40 நிமிடங்கள் விளையாடி ஆகவேண்டுமே!

பக்கத்திலுள்ளவர்கள், 'முறிந்த கை பாழாகிப் போய்விடும். பிறகு எதற்கும் பயன்படாது' என்று பயமுறுத்துகின்றார்கள். ஏதேதோ எடுத்துச் சொல்லி

தடுத்து நிறுத்தப் பார்க்கின்றார்கள். முடியவில்லை. என் கை போனாலும் போகட்டும். இந்தச் சமயத்தில் எனது சேவை என் நாட்டுக்குத் தேவைப்படுகிறது. என்னுடைய கடமையை சரிவர செய்யாமல் நான் ஒதுங்கிப்போய் விடமாட்டேன். என்று அந்தத் தலைவன் தகுந்த சமாதானம் கூறி, மீண்டும் ஆடத் தொடங்கிவிடுகிறான்.

நாற்பது நிமிடங்களும் பம்பரமாகச் சுழன்று பயங்கரமாக விளையாடுகிறான். தனது சக ஆட்டக்காரர்களை யெல்லாம் உற்சாகப்படுத்துகிறான். உணர்வினை ஊட்டுகின்றான். இறுதியிலே, வெற்றியை ஈட்டித் தருகின்றான் தன் தாயகத்திற்கு. தன் தாயகம் புகழ் பெற வேண்டும் என்பதற்காகத் தன்னையே தந்திடத் தயாராக நின்றவனாக விளையாடிய அந்த மாபெரும் வீரன், பெருந்தலைவன் பெயர் தெரியுமா? ஆலன் பிரஸ்காட் என்பது தான்.

தகுதியும் திறமையும் தான், ஒருவரைத் தலைவனாக்கு கிறது. ''தலைவனாக வந்து விட்டால் எல்லாம் முடிந்து போய்விட்டது. எண்ணியதும் கிடைத்துவிட்டது, இனி எப்படியிருந்தால் என்ன'' என்பதாக ஒரு சிலர் எண்ணிக்கொண்டு ஏனோ தானோவென நடப்பதால் தான், வாய்ப்பினைப் பெற்றும் வந்த சுவடு தெரியாமல் போய்விடுகின்றனர்.

தன்னை நம்பி வந்தவர்களைத் தன்னம்பிக்கையுடன் நடத்தி, தகுந்த வழிகளையும், முறைகளையும் தந்து வெற்றிக்கு வழி நடத்திச்செல்லும் விவேகத்தினால் தான் தலைவன் என்று பிறர்புகழ்கின்றார்கள்.

அத்தகைய அரிய பண்புள்ளவர்களையே உலகம் புகழ்கிறது. சரித்திரம் சான்றுகாட்டி நின்று, பெரும்

புகழைப் பிற்கால சந்ததியினருக்குப் பறைசாற்றிக் கொண்டும் வருகிறது.

அத்தகைய அரிய வரலாற்று நாயகனாக, தனிப் பெருந்தலைவனாக விளங்கும் பேறு பெற்றான் ஆலன் பிரஸ்காட். முறிந்த கையைக் காட்டி ஒதுங்கியிருக் கலாம். ஆனால், கடமையைக் கண்ணாகக் கருதி, தாய் நாட்டுக்காகத் தன்னையே தரத்தக்கத் தியாக மனத் தினனாய் விளங்கி, 'தலைவர்கள் இவ்வாறுதான் விளங்கவேண்டும்' என்ற ஓர் இலக்கியமாகத் திகழ்ந்த ஆலன்போல், இங்கேயும் தலைவர்கள் தோன்ற வேண் டும். அப்பொழுதுதான் நம் விளையாட்டுத்துறை பெருமை பெறும். நம்நாடும் உலக நாடுகளுக்கிடையே நாயகமாக விளங்க முடியும்.

தனிப்பெருந் தலைவனாக விளங்கியவனின் கடமை உணர்வை, குழுவை நேசிக்கும் பண்பை, தாயகப் பற்றை, சகிப்புத் தன்மையை, வீர உணர்வினைப் போற்றுவோம். பின்பற்றுவோம். நாமும் உயர அதுதானே நல்லவழி!

# விதி விளையாடுகிறது!

குத்துச்சண்டை மேடையிலே கொடூரம் கண்களிலே கொப்பளிக்க நின்று கொண்டிருக்கின்றார்கள் இரு வீரர்கள். அது பேரெடைப் பிரிவில் உலக வெற்றி வீரன் பட்டத்திற்கான போட்டி. ஏற்கனவே வெற்றியைப் பெற்றிருந்த வீரன், தன் பட்டத்தைக் காக்கப் போராடுகிறான். பட்டத்தைப் பறிகொடுத்திருந்த வீரன், மீண்டும் அதைப் பெற்று தன் பெருமையை நிலைநாட்டிக் கொள்வதற்காகப் போராடுகிறான்.

மானத்திற்காகப் போராடுகின்றார்கள். அதைக் காண லட்சக்கணக்கான கூட்டம். வெறிகொண்ட வேங்கையென இரண்டு வீரர்களும் மேடையிலே பாய்கின்றார்கள். முகத்திலே முரட்டுத்தனமாகக் குத்திக்கொள்கின்றார்கள். மூர்க்கத்தனத்தின் எல்லையிலே தாக்குதல் நடைபெறுகின்றது. என்றாலும்; இருவரும் சளைக்கவில்லை. களைக்கவில்லை.

6 ரவுண்டுகள் முடிகின்றன. குத்துக்கள் தான் விழுந்தனவே தவிர, எதிர்பார்த்த எதுவும் நடக்க

வில்லையே என்ற ஏமாற்றம் ரசிகர்கள் மனதிலே அலை பாய்ந்து கொண்டிருந்தது. இல்லை இல்லை. கனலாகக் காய்ந்து கொண்டிருந்தது.

7வது ரவுண்டு மணியொலிக்குப் பிறகு, வீராவேசமாகப் போட்டி தொடங்கியது. தோற்றிருந்த வீரன், **ஜேக்டெம்ப்சி** என்ற வீரன்தான். வெற்றி வீரன் என்ற பட்டத்தைக் கொண்டிருந்த **ஜீன்டன்னி** என்பவன் முகத்திலே நான்கைந்து குத்துக்களை பலமாகக் குத்தி விட்டான். சரமாரியாக விழுந்த குத்துக்களினால் அதிர்ச்சியடைந்த ஜீன்டன்னி, தற்காப்புக்காகத் தடுத்துக் கொள்ள முடியவில்லை.

தாக்குதலின் வேகம் தாங்க முடியாமல், மேடையைச் சுற்றிக் கட்டியிருக்கும் கயிற்றிலே சாய்ந்தான். சாய்ந்த நிலையிலிருந்து மெதுவாக சரிந்தான். சரிந்ததுமில்லாமல், கால்கள் நிலை கொள்ளாமல் மேடைத் தரையிலே விழவும் செய்தான். இதுதான் எதிரியைத் தாக்க நேரம். ஒரே குத்தில் அவனை 'நாக்அவுட்' செய்துவிட வேண்டும் என்று ஜேக்டெம்ப்சி (Jack dempsey) ஆடிக்காற்றாக விரைந்து வந்தான். முனைந்து நின்றான்.

போட்டிக்கு நடுவராகப் பணியாற்றியவர் தாவே பாரி (Dave barry) என்பவர். விழுந்து புரளும் வீரனை வெற்றியுடன் தாக்க முனையும் முயற்சியைத் தடுத்தார். விழுந்தவனுக்கு இரக்கம் காட்டும் எண்ணத்தால் அல்ல. அதுதான் ஆட்டத்தின் விதி.

கீழே கிடக்கும் வீரனைத் தாக்கக் கூடாது. அவன் கீழே விழுந்த பிறகு, மீண்டும் தன்னை சமாளித்து எழுவதற்கு 10 எண்ணிக்கை (10 Counts) அவகாசம்

உண்டு. அந்த எண்ணிக்கைக்குள் விழுந்தவன் எழுந்து நின்றால் போட்டியை மீண்டும் தொடங்கலாம். இல்லை யென்றால், விழுந்தவன் தோற்றான் என்று முடிவு செய்யப்படும்.

கீழே விழுமாறு குத்திய வீரன் விழுந்தவன் அருகிலேயே நின்று கொண்டிருந்தால், நடுவர் எண்ணுவதைத் தொடங்க மாட்டார். அவர் தனது நிற்கும் இடத்திற்குப் போனவுடன் தான் எண்ணிக்கையைத் தொடங்குவார். ஜின்டன்னி கீழே விழுந்து கிடக்கிறான். அவனைச் சுற்றிச் சுற்றித் தாக்கிட ஜேக்டெம்ப்சி வந்து நிற்கிறான்.

நடுவர், டெம்ப்சியை இடத்திற்குப் போகச் சொல்லி எச்சரிக்கைத் தருகிறார். டெம்ப்சியோ ஆவேசத்தில் எழுந்த ஆக்ரோஷத்தில், இருந்த இடம் விட்டுச் செல்லாமல் நிற்கிறான். அதனால் நடுவர் அந்த பத்து எண்ணிக்கையை எண்ணாமல் இருக்கிறார். அதனால், மேடைப் புறத்து 'நிறுத்துக் கடிகாரங்கள்' (Stop watches) ஓட விடப்படாமலேயே இருக்கின்றன. இவ்வாறு பல வினாடிகள் வீணாகிக் கொண்டிருந்தன. அதாவது 14 வினாடிகள் கழிந்து போயின.

அதற்குள் அந்த ரவுண்டும் முடிந்துவிடுகிறது. இடைவேளை நேரம் வருகிறது. அதற்குள் நிலைமையில் சற்று மாறுதல். ஜின்டன்னி மீண்டும் போரிடுவதற்குத் தயாராகிக் கொள்கிறான். பிறகு, மூன்று ரவுண்டுகள் குத்துச் சண்டை தொடர்ந்து நடந்தது. அதில் ஜேக்டம்ப்சி எவ்வளவோ முயன்றும், முன்போலவே எதிரியை வீழ்த்த முடியவில்லை.

இறுதியில் என்ன நடந்தது என்று நினைக்கின்றீர்கள்? நெருப்பாகத் தாக்கும் ஜேக்டெம்ப்சி நிலை

மாறிக்கிடந்த ஜீன் டென்னியிடம் தோற்றுப் போனான். வெற்றியின் விளிம்பிலே வீராவேசத்துடன் நின்று கொண்டிருந்த ஜேக் ஏன் தோற்றுப்போனான்?

விதியை மதிக்காத காரணத்தால்தான். தன் எதிரியை அடித்து வீழ்த்திய உடனேயே தனது இடத்திற்குப் போய் நிற்க வேண்டும் என்ற விதியை ஜேக் மதித்திருந்தால், தன்னுடைய இடத்திற்குப்போய் நின்றிருந்தால், நடுவரும் எண்ணிக்கையைத் தொடங்கி யிருப்பார். 10 எண்ணிக்கையையும் முடித்திருப்பார். எதிரியை 'நாக் அவுட்' செய்த வீரன் என்ற முடிவினையும் அறிவித்திருப்பார்.

இப்பொழுது என்ன நடந்தது பார்த்தீர்களா? 10 எண்ணிக்கைக்குள் முடிந்துவிட வேண்டிய நிகழ்ச்சியானது தொடர்ந்தது. 14 விநாடிகளும் கீழே கிடந்த பிறகும் தோல்வி பெருமல் இருந்தானே 'ஜீன்டென்னி', அங்கேதான் விதி விளையாடியது. ஆமாம் அவனது விதியும் அதில் விளையாடியது.

மீண்டும் வெற்றி வீரன் பட்டத்தைப் பெற்றுவிட்டான் ஜீன்டென்னி. 1927ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ந்தேதி சிகாகோ நகரில் நடந்த குத்துச் சண்டைப் போட்டியிலே, விதி எவ்வாறு விளையாடி இருக்கிறது பார்த்தீர்களா?

விளையாட்டின் விதியும் வாழ்க்கை விதியும் ஒன்றுதான் என்று நம்மை எண்ணத் தூண்டுகின்றதல்லவா? வாழ்க விளையாட்டு விதி என்று வாழ்த்துவோம். மதிப்போம். வழி நடப்போம். விதி கடப்போம். வெற்றியில் திளைப்போம்!

# அதுதான் அதிர்ஷ்டம்!

1960ம் ஆண்டில் ஒரு நாள்!

இந்தியர்கள் இதயமெல்லாம் இன்பமழை. எழுச்சி மிக்கக் களிநடனம். தலைநிமிர்த்தி நடக்கவைக்கும் வீர நிலையின் இசைப் பாட்டு. இருக்காதா என்ன? ஒலிம்பிக் பந்தயத்தில் ஓட்டப்பந்தய நிகழ்ச்சி ஒன்றில், கடைசி ஆறு ஓட்டக்காரர்களுக்குள் ஒருவராக ஒரு வீரன். அதுவும் தங்கப்பதக்கத்தைத் தட்டிச் செல்லுகின்ற தகுதியுடன் இந்திய வீரன் இருக்கிறான் என்றால், இன்ப மழை பொழியாதா என்ன?

யார் அந்த வீரன்? எவ்வாறு அந்த நிலைக்கு உயர்ந்தான் என்று பார்த்தோமானால், உப்பரிகையிலே பிறந்து, ஓய்யாரத்தில் வளர்ந்து, உலகை அனுபவிக்க வந்த சிங்காரக் குடியில் தோன்றிய சீமான் அல்ல அந்த வீரன். பட்டணத்திற்கும் அப்பால் ஒதுங்கிக் கிடக்கும் ஒரு குக்கிராமத்தில் பிறந்தவன். தந்தையோ ஏழை. படிப்பறியா விவசாயி. மண்சுவராலான ஒரு சிறு குடில். அந்தக் கிராமத்திலேயே படிப்பு வாசனை

இல்லையென்றால், இந்தக் குடும்பத்தில் மட்டும் வந்து கொப்புளிக்குமா என்ன?

தன் வீட்டிலிருந்து 2½ மைலுக்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்தில் படிக்கப் போகின்றான் அந்த சிறுவன். நான்கு வகுப்பு முடிப்பதற்குள் வட இந்தியாவில் அடிக்கடி மாறும் வெப்பமும் குளிரும் பனியும் அவனை வாட்டி வதைத்து விட்டன. என்றாலும், துன்பத்தைத் துடைத்து விட்டுக்கொண்டு நான்காம் வகுப்பை முடித்துக்கொண்டு, வேறு ஊருக்குப்படிக்கப்போகிறான். அந்த ஊரின் தூரம் 7½ மைல். தினம் 15 மைல் தூரம் நடந்து, அறிவுதரும் கல்வியை ஆசையுடன் கற்றான். இதற்கிடையிலே, இந்தியா இரண்டாகப் பிரிகிறது. பிரிவினை. இச் சிறுவனின் கிராமத்தில் பல அலங்கோல நிகழ்ச்சிகள். தலைகீழ் மாற்றம். கிராமம் அழிக்கப் படுகிறது. தப்பித்தோம் பிழைத்தோம் என்ற உணர்வுடன் சிறுவன் வேறு பகுதிக்குக் கொண்டு செல்லப் படுகிறான்.

ஏழைச் சிறுவன் தானே! உணவுக்கு எங்கே போவான்? சிப்பாய்களின் காலணிகளுக்கு பாலிஷ் போடுகிறான் காசு வாங்காமல். ஏன் எனில் பசிக்காக, ரொட்டிக்காக அல்லவா அந்தப் பணியைச் செய்கிறான். ரொட்டியை பதிலாகப் பெற்றுத் தான் வளர்கிறான். இல்லை. தன்னை வளர்த்துக் கொள்கிறான். என்னதான் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும், காலம் காத்துக் கொண்டா இருக்கும்! காலம் அவனை வாலிபனாக மாற்றி வைக்கிறது.

எப்படியும் ராணுவத்தில் சேர்ந்துவிட வேண்டும் என்று முயற்சி செய்கிறான். சிபாரிசு இல்லாததால், அந்த வாய்ப்பும் அவனுக்கு எட்டாக் கனியாகப் போய்

விடுகிறது. அதற்காக சும்மா கிடந்திட முடியுமா? ஆட்டோ மெக்கானிக்காக வேலைபார்க்கிறான். மாதம் 15 ருபாய் சம்பளத்தில் ரப்பர் தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்த்து தன் குடும்பத்தையும் காக்கிறான். காய்ந்த ரொட்டியும் வெங்காயமும் தான் அவன் உணவாகத் தினம் கிடைக்கிறது. அவன் பணியும் வாழ்க்கையும் தொடர்ந்து செல்கிறது. வறுமைச் சூழலில் இருந்து விடுதலை கிடைக்கும் நாளும் வருகிறது.

அந்த இளைஞனின் சகோதரனின் சிபாரிசால் 1952ம் ஆண்டு இந்திய ராணுவத்தில் சிப்பாயாகப் பணிபுரியும் பாக்கியம் கிடைத்து விடுகிறது. லாட்டரிப் போட்டியில் லட்சாதிபதியானவன் போல் அந்த இளைஞன் மகிழ்கிறான். மாதச் சம்பளம் 39 ருபாய் தான் என்றாலும், மகிழ்ச்சியடைகிறான். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதற்கு இலக்கணமாகத் திகழ்கிறான்.

எப்படியும் புகழ்பெற்று சிறப்படைய வேண்டும் என்ற ஆர்வத்திற்கு, விளையாட்டுத்துறை வழிகாட்டி அழைக்கிறது. ஓடும் களமே உயிர் மூச்சாகக்கொண்டு உண்மை அன்புடன் அடைக்கலம் புகுந்து விட்டான் இளைஞன். ஓட்டமே அவனது வாழ்க்கையின் லட்சியமாக, வாழ்வின் ஜீவனாகத் தோன்றிவிட்டது. உலக வெற்றிவீரன் ஆவதையே, இரவும் பகலும் காணுகின்ற கனவாகவும் மாறிவிட்டது.

இடைவிடாப் பயிற்சி. மழை, வெயில், பனி, குளிர் என்று பாராது அவன் தொடர்ந்து செய்த பயிற்சி—இளைப்பிலும் களைப்பிலும் சலித்துக் கொள்ளாமல் சிரமேற்றுச் செய்த பயிற்சி, அவனை இரத்த வாந்தி எடுக்கின்ற நிலைக்கு ஆளாக்கிய பொழுதுங்கூட, அந்த

இளைஞன் நிறுத்திவிடவில்லை. ஓடினான். ஓடினான். ஓடிக் கொண்டே இருந்தான்.

1957ம் ஆண்டு வந்தது. இராணுவ வீரர்களுக் கிடையே நடந்த அகில இந்தியப் போட்டியில் 200 மீட்டர் தூரத்தை 21.5 வினாடியிலும், 400 மீட்டர் ஓட்டத்தில் 47.2 வினாடியிலும் ஓடியபோது, இந்திய விளையாட்டுத்துறை வல்லுநர்களின் ஆழ்ந்த கவனம் அந்த இளைஞனை நோக்கிப் பாய்ந்தது. 1958ம் ஆண்டு 46.6 வினாடி என்று 400 மீட்டர் தூரத்தை ஓடியபோது, இந்தியாவில் இந்த வீரனுக்கு இணையான ஓட்டக்காரர் யாரும் இல்லை என்று போற்றிப் பாராட்டி மகிழ்ந்தது.

1953ம் ஆண்டு ஆசியா கண்டத்திற்கான போட்டி வந்தது. டோக்கியோவில் நடந்த போட்டியின் போது, 400 மீட்டர்; 200 மீட்டர் இரண்டிலும் தங்கப்பதக்கம் பெற்று, ஆசியாவிலேயே மிக மிகச் சிறந்த விரை வோட்டக்காரர் என்ற சீரிய புகழைப் பெற்றான் அந்த இளைஞன். நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமும் என்பார்களே, அந்த நிலையில் இளைஞனின் பயிற்சி மெருகேறியது. வெற்றியும் வந்து குவிந்த வண்ணம் இருந்தது. ஜப்பான் தேசத்து சக்கர வர்த்தியின் ஒப்பற்ற பாராட்டும்கிடைத்ததுமில்லாமல், ஆசியாவிலே சிறந்த ஓட்டக்காரர் என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டு இந்தியா வந்தபோது, பிரதமர் நேரு அவர்களும், ஜனாதிபதி ராஜேந்திரபிரசாத் அவர்களும் போற்றி மகிழ்ந்தனர். சிப்பாயாக இராணுவத்தில் பணியாற்றி வந்த இளைஞனின் சேவையைப் போற்றி JCO என்ற அந்தஸ்துக்கும் உயர்த்திக் கௌரவித்தனர்.

இந்த நிலையில் தான், 1960ம் ஆண்டு ரோம் ஒலிம்பிக் பந்தயமும் வந்தது. அதற்குள்ளே அந்த

மாவீரன் 400 மீட்டர் ஓட்ட சாதனையானது 45.9 விநாடிக்கு வந்து விட்டது. ஒலிம்பிக் பந்தயத்திற்கு முன்னே, பிரான்சு நாட்டில் ஓடிய ஓட்டத்தில் 45.8 விநாடியில் ஓடி உலக சாதனையைப் பொறித்ததைக் கண்டு, உலகமே அந்த இளைஞனை வாழ்த்தி வரவேற்றது. 'ஒலிம்பிக்கிலும் வெற்றிவீரன் இவனே' என்று கட்டியம் கூறியது. பத்திரிக்கைகள் எல்லாம் பலபடப் பாராட்டின. பிற வீரர்களும் ஆமோதித்தனர்.

400 மீட்டர் ஓட்டத்தில் கடைசி 6 பேராக நின்ற பொழுது, இந்த இளைஞனே வெல்லுவான் என்று எல்லோரும் எதிர்பார்த்தது போலவே இந்தியா எங்கனும் ஏக்கத்துடனும் உற்சாகத்துடனும் எதிர் நோக்கிக் காத்திருந்தது. ஓட்டம் தொடங்கிவிட்டது. எல்லோரையும் முந்திக்கொண்டு ஓடிய அந்த வீரன், பிறகு வேகமாக ஓடலாம் என்று எண்ணி, சிறிது வேகத்தைத் தளர்த்தியபோது, அதுவே பெருந் தவருகப் போய்விட்டது. இவன் பின்னே வந்த மூன்று வீரர்கள், திடீரென்று பாய்ந்து ஓடி முன்னேறத் தொடங்கினர். 300வது மீட்டர் தூரத்தில் இந்த நிலை ஏற்பட்டு விட்டது. பிறகு என்ன முயன்றும், அவர்களைக் கடந்திட முடியவில்லை. வெல்லவும் முடியவில்லை.

நான்காவது இடத்தையே அந்த வீரனுல் பெற முடிந்தது. ஒலிம்பிக் சாதனையை முறியடித்து விரைவாக ஓடியபோதும், ஒரு பதக்கம் கூட வாங்க முடியாத நிலையல்லவா ஏற்பட்டுவிட்டது? தங்கப் பதக்கத்தை எதிர்பார்த்திருந்த பாரதம், தாங்க முடியாத வேதனைக் குள்ளாகியது. அனைத்து வாய்ப்பும் இருந்தும், ஆற்றல் இருந்தும், சூழ்நிலை அமைந்தும், தங்கப் பதக்கம் கிடைக்கவில்லையே! அதுதான் நம் அதிர்ஷ்டம்!

காய்ந்த ரொட்டிகூட கிடைக்காமல் கஷ்டப்பட்ட நிலையில் வளர்ந்த ஒரு வீரன், இந்த உலகமே பாராட்டும் வண்ணம் உழைப்பால் உயர்ந்தும், அதிர்ஷ்டம் இல்லாமல் போனதே! யாரை நோக! அந்த அற்புத இளைஞன் தான்; உலகத்தாரால் **பறக்கும் சீக்கியர்** என்று புகழப்பெற்ற **மில்காசிங்.**

'எத்தனையோ இன்னலும் இடர்ப்பாடும் இருந்தாலும் எதிர்த்தாலும், இலட்சியத்தை உயிர் மூச்சாகக் கொண்டவர்களை எதுவும் செய்யமுடியாது' என்று உலகுக்கு உணர்த்திய மாவீரன் மில்காசிங்கின் அதிர்ஷ்டம், அவ்வளவுதான் என்றாலும், நாம் இன்னும் முயல்வோம். ஆயிரமாயிரம் மில்காசிங்குகளை உருவாக்க முயல்வோம். அரிய உழைப்பிற்கு அதிர்ஷ்டம் நிச்சயம் ஒருநாள் தலைதாழ்த்தியே தீரும். அந்தக் காலமும் வரத்தான் போகிறது!

# பரபரப்புக்குப் பின்னல்!

பந்தய மைதானத்தில் பார்வையாளர்களாக அமர்ந்திருந்த அனைவரும், ஆனந்தத்துடன் எழுந்து ஆரவாரம் செய்தனர். வெற்றி வீரனாகப் பந்தய மைதானத்தை அவன் சுற்றி வருவதைக்கண்டு, வியப்பின் எல்லைக்கே சென்று, விந்தைமிகு வீரனை வாயார வாழ்த்தி வரவேற்றனர்.

26 மைல்களுக்குரிய அந்த மாரதான் ஓட்டத்தை எவ்வளவு சீக்கிரமாக ஓடிமுடித்து வந்துவிட்டான் என்பதுதான் அவர்களை வியப்பில் ஆழ்த்திவிட்டது. பாரிஸ் நகரத்தின் படுமோசமான பாதையில் அல்லவா ஓட்டக்காரர்களை ஓடவிட்டிருந்தார்கள்! அத்தனை மேடு பள்ளத்திலும் ஏறி இறங்கி, எதிர்ப்பினைத் தந்த இன்னல்களையும் மீறி, எத்தனை விரைவாக ஓடி வந்து விட்டான் என்பதிலே அவர்களுக்கு உற்சாகம்.

புகழாரம் சூட்டிக்கொள்ளப்போகும் பெருமதிப்பிற்குரிய அவ்வீரனை, புகைப்படக்காரர்கள் மின்னல் வேகத்தில் படங்களாக எடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வீரன் முகத்திலே ஓடிவந்த களைப்பும் இல்லை.

எவ்வளவு வல்லமையும் பயிற்சியும் பெற்றிருந்தால் இவன் இப்படித் தோற்றமளிக்கமுடியும் என்றும் பலர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வெற்றி வீரன் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓட்டக்காரனை, பரிசு வழங்க இருக்கும் மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். அவனும் பவ்யமாக பரிசு பெறச்சென்றான். அவன் முகத்திலே குறும்புத்தனமான குதூகலம் கொப்பளித்துக்கொண்டிருந்தது. வெற்றி பெற்றதால் ஏற்பட்ட செருக்கா? தன்னை மீறி எழுந்த தலைக்கனமா? அவனன்றி யார் அறிவார்?

அமெரிக்க நாட்டின் சார்பாக, ஜனாதிபதி ரூஸ்வெல்டின் மகளான ஆலிஸ் ரூஸ்வெல்ட்தான் அன்றைய தினம் பரிசினை வழங்கிக்கொண்டிருந்தாள். தன் நாட்டு வீரன் இம்மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறான் என்பதிலே ஆலிசுக்கும் மகிழ்ச்சியே! ஆன்ற புகழ் தரும் பரிசான ஆலிவ் மலர் வளையத்தை தலையில் சூட்டி, தங்கப்பதக்கத்தைத் தர இருக்கின்ற நேரத்தில், எங்கிருந்தோ ஒரு குரல்.

'தராதீர்கள்' என்ற குரல் தடுத்து நிறுத்தியது. பரிசு தரும் நிகழ்ச்சி பரபரப்புக்கிடையே பாதியில் நின்றது. காரணம்?

'26 மைல் தூரத்தை அவன் ஓடி முடிக்கவில்லை. ஓடாமல் ஏமாற்றிவிட்டான்' என்பதே அந்தக் குரல் கொடுத்த வாக்குமூலம். அப்படியா? எப்படி எல்லோரையும் ஏமாற்றமுடியும்? என்று கேட்டவர்கள் தங்களையே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

விரும்பத்தகாத முறையிலே வெற்றியையும் பரிசையும் பெறவிருந்த வீரன், 'வேறு வழி இல்லை, இனிமேல் பேசுகின்ற பொய் சபையேறாது' என்று நினைத்து உண்மையைப் பேசத்தொடங்கி விட்டான். பந்தயத்திலே கலந்துகொண்டது உண்மை. 40 கிலோ மீட்டர் தூரத்திலே 15 கிலோ மீட்டர் தூரம் ஓடிவந்ததும் உண்மை. அதற்குப் பிறகு?

பாதி தூரத்திலே அவனது காலின் தசைப் பகுதிகள் ஓட முடியாத அளவுக்கு இழுத்துக்கொள்ளவே, பந்தயத்தில் இருந்து விலகிக்கொள்வது என்ற முடிவுக்கு வந்து, நின்றும் விட்டான். பாதியிலே நின்று விட்டால் எப்படி? பந்தயம் நடக்கின்ற இடம்வரை போயாக வேண்டுமே? என்ன செய்வது? என்று யோசனை செய்துகொண்டிருக்கும்போது, கூடவே வந்துகொண்டிருந்த 'ஆட்டோ'வில் ஏறி உட்கார்ந்து கொண்டான். வண்டியில் ஏறி அமர்ந்ததும், வலியும் வேதனையும் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது.

பல ஓட்டக்காரர்கள் இவன் வண்டியில் ஏறி அமர்ந்ததைப் பார்த்திருக்கிறார்கள். இந்த வீரனின் அதிர்ஷ்டமோ அல்லது கெட்ட நேரமோ என்னமோ, அவன் ஏறிவந்த வண்டியும் பழுதடைந்துவிட்டது. அதுவும் ஓடாது என்ற நிலையில் இவன் இறங்கிக் கொண்டான். நடக்கத் தொடங்கியபோது, காலில் பிடிப்பு இல்லை என்று உணர்ந்ததும், ஓடத் தொடங்கினான். ஓட்டமும் தொடர்ந்து, பந்தய மைதானத்துக் குள்ளும் வந்துவிட்டான்.

எல்லோரும் எழுந்திருந்து இவனை வரவேற்று, கை தட்டியபொழுது, இவன் தன்னையே மறந்துவிட்டான்.

அவனுக்கு அது ‘தமாஷாக’ இருந்தது. இவனும் கையசைத்துக்கொண்டே ஓடியது மேலும் பார்வையாளர்களுக்கு உற்சாகமாக இருக்கவே, தவறு செய்தவன் அதை மறைக்க முயன்று, தன்னையே வெற்றி வீரனாகவும் நினைத்துவிட்டான். ‘‘தமாஷ்’ என்று நினைத்து செய்தேன். நான் முழு தூரத்தையும் ஓடவில்லை. பந்தய மைதானத்திற்குள்ளே வைத்திருந்த என் ஆடைகளை எடுத்து வரவே ஓடிவந்தேன். எல்லோரும் பாராட்டவே, நான் பேசாமல் இருந்து விட்டேன்.’’ என்று அவன் ஒத்துக்கொண்டான்.

தோற்றிருந்தாலும் தலைநிமிர்ந்து நடக்கவேண்டிய அவன், தலைகுனிந்து நடந்தான். கேலிப் பார்வையும் கிண்டல் பேச்சும் அவனைக்கூடவே தொடர்ந்து வந்தன. சரித்திரலே அவன் சாகாத இடத்தைப் பெற்று விட்டான்.

ஆமாம்! குறுக்கு வழியில் புகழ்பெற முயன்றால், கேலிக்கும் கிண்டலுக்கும் அவமானத்திற்கும் ஆளாக நேரிடும். என்ற பொன்மொழிக்கு சான்றாக அல்லவா நின்று விட்டான்.

அவன் பெயர் பிரட்லார்ஸ்(FRED LORZ.) 1904ஆம் ஆண்டு செயின்ட் லூயிஸ் எனும் இடத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில்தான் இந்த அமெரிக்க வீரன் பிரட் தவறு செய்தான். தெரிந்தும் செய்த தவறுக்கு அவன் பெற்ற தண்டனை—காலமெல்லாம் அவன் எந்தப் போட்டியிலும் கலந்துகொள்ளக்கூடாது என்பதுதான்.

சிறிது காலம் கழித்து அத்தண்டனை மாறிப் போனாலும், அவன் பெற்ற அவமானம் மாறுமா? மறையுமா? **நேர்மை வழியில் செல்பவரே, எல்லோருடைய நெஞ்சிலும் நிலைத்து நிற்கமுடியும்!**

# இனிக்காத இன்பம்!

வேடிக்கை பார்க்க வந்த ரசிகர்கள் எல்லோரும் விவரிக்க இயலாத ஒருவித மனோநிலையில் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒலிம்பிக் பந்தய அரங்கிலே கூச்சலுக்குப் பஞ்சமா என்ன? அவர்களுக்கும் பொழுது போயாக வேண்டுமே!

ஆனால், அங்கு கத்தியவர்கள் காரணத்தோடுதான் அதைச் செய்துகொண்டிருந்தார்கள். உலக நாடுகளிலேயே சிறந்த வீரர்கள் கலந்துகொள்ளும் உக்கிரமமான போட்டிகள் நடைபெறுகின்ற இடம் அல்லவா அது! அவர்களை உற்சாகப்படுத்தவா அந்தச் சத்தம் என்றால், அதுவும் அல்ல! அநியாயத்தை எதிர்த்தே அந்த ஆர்ப்பாட்டமான சத்தம் சமுத்திரம்போல் எழும்பிக் கொண்டிருந்தது.

அப்படி என்ன அநியாயம் லட்சக்கணக்கான மக்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே நடக்க, என்று கேட்க வேண்டும்போல் தோன்றுகிறதல்லவா? 'இப்படி ஒரு அநியாயம் எந்தப் போட்டியிலும் நடக்கவே இல்லை.

என்று அவர்கள் பேசிக்கொள்வதுபோல் உங்களுக்கும் கேட்குமே!

ஆமாம்! அவர்கள் தங்களுக்குள்ளேயும் பக்கத்தில் உள்ளவர்களுக்கிடையிலும் அப்படித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

5000 மீட்டர் தூரம் ஓடுகின்ற ஓட்டப் போட்டி அது. சிறந்த வீரர்கள் பலர் ஓட்டத் தொடக்கத்திலே கலந்து கொண்டார்கள். $12\frac{1}{2}$ ரவுண்டுக்குமேல் ஓடக் கூடிய தூரம் அல்லவா! அத்தனை சுற்றுக்களையும் சுற்றிவிட்டு ஓட்டத்தை முடிக்கவேண்டிய தூரமும் குறைந்து, வெற்றி பெறவேண்டியவர்கள் யார் என்று கண்டுகொள்ள வேண்டிய நிலையில் இரண்டு வீரர்கள் ஓடி வந்து கொண்டிருக்கும் பொழுதுதான், அந்த சூழ் நிலை அனலாகக் காய்ந்தது.

யார் வெல்லப் போகிறார் என்று யாராலும் உறுதியாகச் சொல்ல முடியாத அளவில் இருவரும் ஓடி வந்தார்கள். முதலாவதாக ஓடிவருகின்ற வீரனின் பெயர் லாரி லெட்டினன் (Lauri Lehtinen) எனும் பின்லாந்து வீரன். அவனது பின்னால் ஓரடி இடைவெளியில் ஓடிவரும் வீரன் பெயர் ரால்ப் கில்(Ralph Hill) என்பதாகும்.

அமெரிக்க நாட்டிலே லாஸ்ஏஞ்செல்ஸ் எனும் நகரத்திலே 1932-ம் ஆண்டு நடைபெறுகிற ஒலிம்பிக் பந்தயம் அது. தன் நாட்டு வீரன் தங்கப்பதக்கம் பெறும் நிலையில் இருக்கிறான் என்பதை அறிந்து கொண்ட பார்வையாளர் கூட்டம், படு பயங்கரமாகக்

கத்திக் கொண்டிருக்கும் நேரத்தில்தான், பின்லாந்து வீரனுக்கும் அமெரிக்க வீரனுக்கும் இடையே கடும் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எல்லைக் கோட்டைக் கடக்க இன்னும் ஒருசில கெஜ தூரம்தான். பின்லாந்து வீரன் முன்னே ஓட, ஓரடி இடைவெளியில் அமெரிக்க வீரன் பின்னே வர, ஆதரவாளர் கூட்டம் ஆரவாரம் எழுப்பியவுடன், அமெரிக்க வீரன் உற்சாகம் பெற்று முன்னே ஓட முனைந்துவிட்டான்.

லாரி லெட்டினனைக் கடந்துவிட்டால் முதலாவதாக வந்துவிடலாம் என்ற நினைவுடன், லாரியின் இடது புறமாகக் கடந்து ஓட முயன்றான் ரால்ப். ஆனால் லாரியோ, 'நம் ஊர் லாரிக்காரன்போல' வழிதரவில்லை. முன்னே போகாமல் அந்தப்புறம் ஓடினான். அதனால் வழி கிடைக்காமற் போகவே, லாரியின் இடது புறமாகக் கடந்து ஓட முயன்றான்.

இப்பொழுது இடதுபுறமாக குறுக்கே சென்று, முன்னால் ஓட முடியாதவாறு மறைத்துக் கொண்டான் லாரி. இந்த இரு முயற்சிகளையும் கெடுத்துவிட்ட நிலையில் ஓட்டமும் முடிவடைந்துவிட்டது. பின்லாந்து வீரனை லாரி லெட்டினன் முதலாவதாக வந்தான் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. லாரியும் தான்தான் முதலாவதாக வந்திருக்கிறோம் என்று அறிந்து மகிழ்ச்சியடைகின்ற வேளையில்தான், ஒலிம்பிக் பந்தய அரங்கம் முழுவதும் ஓங்காரக் கூச்சல் விண்ணைப் பிளக்கும் வண்ணம் வந்து கொண்டிருந்தது.

'விதியை மீறிய வீரனுக்கா முதல் பரிசு?' அடுத்த வரை தடைசெய்து ஓடியது அநியாயம் அல்லவா?

சட்டப்படி அந்த வீரனை ஓட்டப்போட்டியிலிருந்து நீக்கி விட வேண்டாமா? என்பதுதான் பார்வையாளர்களின் குரல்களாக ஒலித்தன. அப்பொழுது ஓர் அறிவிப்பு ஆங்கே எழுந்தது. மகுடி கேட்ட நாகமென மக்கள் கூட்டம் அமர்ந்தது. அப்படியென்ன ஆட்களை மடக்கும், அடக்கும் அறிவிப்பு அது!

'வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் வீரன் நமது விருந்தினன்' என்பதுதான் அந்த அறிவிப்பு. விருந்தினரை மதிக்கும் நாட்டினர், விருந்தினர் என்றதும் வெறுப்பை உதறி விட்டுவிட்டு, அவன் பெற்ற சிறப்புக்காகப் பாராட்டிக் கை தட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

இதற்கிடையில் லாரியும், ரால்ப்கில்லும் ஓடிய நிகழ்ச்சியைப் படம்போட்டுக் காட்ட, அதை லாரிபார்க்க வேண்டிய வாய்ப்பும் கிட்டியது. அதில், தான் ரால்ப்கில்லை எவ்வாறு முன்னே ஓடவிடாமல் தடுத்திருக்கிறோம் என்பதைப் பார்த்தவுடன், லாரிக்கும் வெட்கம் மேலிட வேதனை மிகுதியாயிற்று. தவருக நடந்துகொண்டது பற்றி வேதனை மீறிட, தனக்கு அவ்வாறு பெற்ற தங்கப்பதக்கம் வேண்டாமென்று கூறும் நிலைமையில் லாரி வந்துவிடவே, தன்னை மீறிய களைப்பில் நேர்ந்த தவறை நினைத்து மிகவும் வருந்தினுன். 'வேறு எங்கிருந்தும் அதற்கான எதிர்ப்பு வரவில்லை' என்றதால் லாரியின் கோரிக்கை அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டது.

பிறகு, பதக்கம் பரிசளிக்கும் விழா நடைபெற்ற போது, முதலாவது இடத்தில் நின்ற லாரி, இரண்டாம் இடத்தில் நின்ற ரால்ப்கில்லை அழைத்துத் தன்னுடன் வந்து மேலே நிற்குமாறு அழைத்தபோது, ரால்ப் ஏறி

வராமல், லாரியே வெற்றி வீரன் என்று வற்புறுத்தினான். மன உறுத்தலில் இனிக்காத இன்பமுடன் லாரி தங்கப் பதக்கம் பெற்றபோது, மன மகிழ்ச்சியுடன் எந்தவித வேதனையும் இல்லாமல் ரால்ப் வெள்ளிப் பதக்கம் பெற்றபோது, அவனது பெருந்தன்மையைப் போற்றி, அரங்கமே கை தட்டி வரவேற்று வாழ்த்தியது.

ஓட்டப் பந்தய நிகழ்ச்சிகளில் போட்டியாளர்களாகப் புறப்பட்டு, தவறுக்கு இடையே தகுதிபெற்று, மனமாற்றம் நிகழவேண்டிய நேரத்தில் மாறிவிட்டு, களைப்பும் இளைப்பும் தாக்கும்போது ஏற்பட்டது தவறு அல்ல என்று மன்னித்து மறந்த ரால்ப்கில்லும், தவறுக்கு வருந்திய லாரி லெட்டினனும் அன்றிலிருந்து ஆருயிர் நண்பர்களாக மாறிவிட்டனர்.

சிறிய தவறுக்கே சீறிப் பாயும் நாம், சரித்திரம் படைக்கவிருந்த பாதையை மறைத்துப் பெருங்குற்றம் செய்தவரை மன்னித்த மனத்தின் மாண்பினை எண்ணுவோம். விளையாட்டு உலகம் வழங்கும் இன்பச் செய்தியான பண்புச் செய்திகளைப் படித்தும் கேட்டும் பின்பற்றி பெருவாழ்வு வாழ்வோமாக!

# ஒலிம்பிக்கில் ஓடிய இட்லர்!

ஒலிம்பிக்கில் ஓடுவது என்ருல் புகழுக்காக என்பது நமக்குத் தெரியும். வெட்கப்பட்டுக் கொண்டு ஓடிஞர் ஒருவர் என்ருல் வேடிக்கையாக அல்லவா இருக்கிறது!

1936ம் ஆண்டு ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரில் ஒலிம்பிக் பந்தயம் நடைபெற இருந்தது. ஆகஸ்டு 1ம் தேதி போட்டிகளைத் தொடங்கி வைத்தவன் இட்லர் தான். கம்பீரமாக பீரங்கிகள் முழங்கின. சமாதான தூதுவர்களாக மூவாயிரம் வெண்புருக்கள் வானிலே பறக்கவிடப்பட்டன.

முதல் போட்டி குண்டெறியும் போட்டி (Shot put). வெற்றி பெற்றவர் ஜெர்மனியைச் சேர்ந்த ஹேன்ஸ் உல்க் என்பவர். 1896ம் ஆண்டிலிருந்து ஒரு முறைகூட ஜெர்மனி தங்கப் பதக்கம் ஒன்றுகூட வாங்கவில்லை. முதல் முறையாக வெற்றி பெற்றதும், இட்லருக்கும் அவரது கும்பலுக்கும் தலைகால் புரியவில்லை.

''உலகத்தில் எல்லா இனங்களிலும் எங்கள் ஆரிய இனமே உயர்ந்தது. வலிமை மிக்கது. எல்லா ஒலிம்பிக்

போட்டிகளிலும் எங்கள் இனமே வெற்றி பெறும்' " என்று போட்டிக்கு முன்னே இட்லர் பேசிய பேச்சுக்கள், உலகத்தை அதிர வைத்திருந்தன. அதற்கேற்ப் முதல் வெற்றி ஜெர்மனி வீரருக்கு என்றதும், இட்லர் தன்னுடைய பரிசளிப்பு முறையில் ஒரு புதிய செயலைப் புகுத்தினன்.

அலங்கார பீடத்தில் அமர்ந்திருந்த இட்லர், தன் முன்னே வீரனை வரச்செய்தான். வாயார வாழ்த்தினன். பரிசளித்தான். அடுத்த நிகழ்ச்சி 10,000 மீட்டர் போட்டி. வெற்றி பெற்ற வீரன் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த இல்மரி சால்மினன். அந்த வீரனையும் அழைத்துப் பாராட்டிப் பரிசளித்தான் இட்லர்.

'நீக்ரோக்கள் தாழ்ந்த இனத்தவர்கள். அவர்களைத் தங்களுடைய வெள்ளை வீரர்கள் போட்டியில் வீழ்த்தி விடுவார்கள்' என்பதுதான் இட்லரின் எண்ணம். ஆகவே, பரபரப்புடன் போட்டியை பார்த்துக் கொண்டிருந்தபோது, அமெரிக்க நீக்ரோ வீரர்களின் வெற்றி வாய்ப்புக்கள் விண்ணேக்கி இருந்தன.

அவர்களிலே ஒரு அற்புத வீரன் இருந்தான். அவன் பெயர் **ஜெசி ஓவன்ஸ்.**

அமெரிக்க நாட்டில் அலபாமா என்ற மாகாணத்தில், ஒரு ஏழைத் தொழிலாளர் குடும்பத்தில் ஏழு குழந்தைகளில் ஒருவனுகத் தோன்றினன் ஜெசி ஓவன்ஸ். வறுமையிலும், வளமில்லாத உடலிலும் வாழ்க்கையைத் தொடங்கிய ஓவன்சுக்கு, பிறவியிலேயே, விளையாட்டுத் திறமை நிறைந்திருந்தது.

இல்லாமையும், தேக இயலாமையும், அவனது வேகத்தைத் தடை செய்யமுடியவில்லை. அவன் முதன் முதலாக ஓடிய வேகத்தையும், நேரத்தையும் கண்டு, கடிகாரம் தவருக நேரம் காட்டுகின்றதா என்று சந்தேகப்பட்டனர் பலர். அத்தகைய பெருவீரன் ஒரே நாளில் ஒரு மணி நேரத்தில் சாதித்த வெற்றிச் சாதனையைப் (RECORDS) பாருங்கள்.

1935ஆம் ஆண்டு மே மாதம் 25ந் தேதி, மிசிகன் என்னுமிடத்தில் சாதித்த ஜெசியின் சாதனையைப் பாருங்கள். மாலை 3-15 மணிக்கு 100 கெஜ தூரத்தை 9.4 விஞடிக்குள் ஓடியது உலக சாதனை

அடுத்து 3-25 மணிக்கு நீளத் தாண்டும் போட்டியில் 26 அடி 8¼ அங்குலம் தாண்டியது உலக சாதனை.

மாலை 3-45 மணிக்கு நடந்த 220 கெஜ தூரத்தை 20.3 விஞடிகளில் ஓடி, உலக சாதனை.

பிறகு 4 மணிக்கு நடைபெற்ற 220 கெஜ தடை தாண்டி ஓடும்போட்டியில் 22.6 விஞடிகளில் ஓடி உலக சாதனை.

இவ்வாறு ஒரு மணி நேரத்திற்குள்ளாக 4 உலக சாதனைகளை சாதித்த மாவீரன் ஜெசி ஓவன்ஸ்தான், 1936ஆம் ஆண்டு ஜெர்மனிக்கும் வந்திருந்தான். ஆனுல், ஓவன்ஸ் மேல் அளவு கடந்த வெறுப்பினை வளர்த்துக் கொண்டிருந்தான் இட்லர்.

ஜெசி ஓவன் ஸ் என்ற அமெரிக்க வீரன் 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டங்களில் உலக சாதனையை ஏற்படுத்தி விட்டான். அவனுக்குப் பரிசு தரவேண்டியது இட்லர் தானே! நீக்ரோ வெற்றி பெறுவதை அவனுல் சகிக்கவும்

முடியவில்லை. வெற்றி பெருதே என்று தடுக்கவும் முடிய வில்லை. இருதலைக் கொள்ளி எறும்பான இட்லர், பரிசு தரவேண்டுமே! பாராட்ட வேண்டுமே! தன்னம்பிக்கை மிக்கத் தன் கொள்கைக்கு கொள்ளி வைத்த நீக்ரோ வீரர்கள் முன்னே நிற்க கூச்சப் பட்டான் இட்லர்.

400 மீட்டர், 800 மீட்டர், உயரத் தாண்டும் போட்டிகளில் தொடர்ந்து அமெரிக்க நீக்ரோ வீரர்களே வெற்றி பெற்றனர். அவர்களை அழைக்க முடியாத தர்மசங்கடமான நிலையில் தலை கவிழ்ந்து யோசித்தான் இட்லர். பார்வையாளர்கள் பார்வை முழுதும் இட்லர் அமர்ந்திருந்த இடம் நோக்கியே இருந்தன. பரபரப் புடன் எழுந்து புறப்பட்டுவிட்டான் இட்லர்.

'பொழுது சாயும் நேரமாகிவிட்டது. வெளியே தூறலாகவும் இருக்கிறது'' என்று அதிகாரபூர்வமான அறிவிப்பு வந்தது. இவ்வாறு முதல் நாள் போட்டிக்கு பரிசு தராமல் புறங்காட்டி மறைத்துக் கொண்டு சமாளித்தாகிவிட்டது. என்ன செய்வது?

மறுநாள் போட்டிகள் தொடங்கின. இரும்புக் குண்டு சுற்றி எறியும் போட்டி (Hammer Throw) நடந்ததில், ஜெர்மனி வீரன் காரல் ஹெயின் வெற்றி பெற்ருன். இட்லருக்கோ ஆனந்தம் தாங்க முடிய வில்லை. ஆனல் வெளிப்படையாகப் பாராட்டிப் பரிசு தர முடியவில்லை.

தனியாக அமர்ந்திருந்த ஒரு பாதுகாப்பான அறைக்குத் தன் நாட்டு வெற்றி வீரனை வரச் செய்து பாராட்டி மகிழ்ந்தான். அதற்குப் பிறகு போட்டிகளை பொதுமக்கள் பார்வையில் இருந்தபடி பார்த்து ரசித்து

வந்த இட்லர், தான் உட்கார்ந்து பார்க்கும் இடத்தை அந்தரங்க அறைக்கு மாற்றிக் கொண்டான்.

அதற்குப் பிறகும், அமெரிக்க வீரர்களின் ஆதிக்கமே இருந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு யாருக்குமே பரிசளிக்க இட்லர் முன் வரவில்லை. ஒலிம்பிக் போட்டியில் ஒரு போட்டி நடந்து முடிந்தால், இட்லர் வெட்கப்பட்டுக் கொண்டு வேதனையுடன் வெளியே ஓடினான்.

இட்லர் ஓடிய ஓட்டத்தைப் பார்த்து, அங்கு அமர்ந்திருந்த விளையாட்டு ரசிகர்கள் மட்டும் நகைக்க வில்லை. உலகமே சிரித்தது. ஆமாம், இட்லரின் அகம் பாவம்தான் அவமானப்படுத்தி இட்லரை விரட்டியது.

இனவெறி இட்லரை ஓட வைத்தது. அந்த ஓட்டம்தான், அவனது அரசியல் வாழ்வின் வாட்டத் துக்கும் அடித்தளமாக அமைந்தது என்றால் அது மிகை யல்ல. ஜெசி ஒவன்ஸ் ஒலிம்பிக் பந்தயத்திற்குள் வெற்றி வீரனாக ஓடினான். இட்லரும் ஓடினான். ஒலிம்பிக் போட்டி யில் அல்ல—தன் கொள்கைப் போட்டியில் தலைகுனிந்த படி. வெளியே ஓடினான். அதுவே வரலாறாக அமைந்து விட்டது.

# ஒரு தாயார்
# ஓடத் தயார்!

---

அவள் தாயார்தான். இரண்டு குழந்தைகளுக்கு அன்புத்தாய்தான். டாக்டர் ஒருவரின் இல்லத்தரசி, அன்பு மனைவி. வயதோ முப்பது ஆகிவிட்டது. ஆண்களே முப்பது ஆகிவிட்டால், 'முடிந்துபோய் விட்டது எல்லாம்' என்று முடிவு கட்டுகின்றபோது. பெண்ணுக்குரிய நிலை என்ன? அந்த வயதிலும், ஆகுமா என்ற நிலையிலும், ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொள்ள, அந்தத் தாய் தயாராக இருந்தாள்.

ஓயாத உடற் பயிற்சி. உண்மையான உழைப்பு. அயராத ஆர்வம். ஆனந்தமான லட்சியம். ஒழுங்கான உணவு முறை. ஒழுக்கமான வாழ்க்கை. இப்படியாகக் காத்திருந்தாள் அந்தத் தாய் 12 ஆண்டுகள்.

ஆண்டுகள் பனிரெண்டு என்பது நீண்டதோர் காலந்தான் என்றாலும், லட்சியவாதியான அந்தத் தாய்க்கு அது பொருந்தவில்லை போலும். மிகப் பொறுமையாகக் காத்திருந்தாள். காத்திருந்தது என்றவுடன், 'காலமே விரைந்து வா' என்று கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடவில்லை. வீட்டு வேலைகளைக் கவனித்தாள். கோலாகலமாகக் குடும்பத்திலும் ஈடுபட்டாள். அத்துடன் விளையாட்டுப் பயிற்சிகளையும் விடாமல் தொடர்ந்து செய்தாள்.

விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றி பெற்று, தங்கப் பதக்கங்கள் பெற வேண்டும் என்ற வேகமும் நோக்கமும் என்றும் மாருமலே இருந்தது. ஆரம்ப காலத்தில், நீச்சல் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசையால், ஆர்வமுடன் பயிற்சிகளைத் தொடங்கிய போது, அது வெற்றிகரமாக அமையவில்லை.

பிளாங்கர்சின் இயக்கங்களைக் கண்ட பயிற்சியாளர், ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டால், உறுதியாக வெற்றி பெற முடியும் என்று அறிவுரை கூறினர். அறிவுரையை ஏற்றுக்கொண்டு பயிற்சி செய்து, உயரத் தாண்டும் போட்டிக்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டு, 1936ம் ஆண்டு பெர்லின் நகரில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் கலந்து கொண்டாள்.

என்னதான் முயன்றாலும், அவளால் ஆருவது இடத்தையே அடைய முடிந்தது. அதற்காக அவள் ஓய்ந்துபோய்விடவில்லை. கன்னியான பிளாங்கர்சின் முயற்சி, கன்னி முயற்சியாகவே போய்விட்டது. அதனுல் கலங்கிப் போய்விடாமல், பயிற்சியைத் தொடர்ந்தாள் பிளாங்கர்ஸ்.

தொடர்ந்து பயிற்சி செய்த சாதனையானது, எந்தப் பந்தயத்திற்குச் சென்றாலும் இவளே வெற்றி வீராங்கனை என்னும் பட்டத்தைக் கொடுத்தது. உயரத் தாண்டும் போட்டி, நீளத்தாண்டும் போட்டி இவற்றில் உலக சாதனைகளைப் பொறித்துவிட்டு, ஒலிம்பிக் பந்தயத்திற்காகக் காத்திருந்தாள்.

ஆனால், அவள் நினைத்ததுபோல்தான் நடக்கவில்லை. 1936ம் ஆண்டுக்குப் பிறகு நான்காண்டுகள் கழித்து நடக்கவிருந்த ஒலிம்பிக் பந்தயம், 1940ம் ஆண்டு நடக்கவில்லை. இரண்டாவது மகா யுத்தம்

உலக நாடுகளுக்கிடையே தொடங்கி, 1944ம் ஆண்டு வரை நீடித்தது. அதனால், பிளாங்கர்சின் நோக்கம் நிறைவேறாமலே போனதே தவிர, நிலைத்துப்போய் விடவில்லை.

இதற்கிடையிலே, பிளாங்கர்சுக்குத் திருமணம் நடைபெற்றது. கைபிடித்தக் கணவன் ஒரு டாக்டர். மனைவியின் மனம் அறிந்து, அவள் லட்சியத்திற்குத் துணை புரிந்து, லட்சியக் கணவனாக வாழ்ந்தார்.

விளையாட்டுப் பயிற்சிகளுக்கிடையே வீட்டு வேலைகளும் தொடர்ந்தன. வளமான குடும்பத் தலைவியாக பரிணமித்த பிளாங்கர்ஸ், வாழ்க்கையிலும் பரிபூரணத்துவம் அடைந்தது போல, இரண்டு குழந்தைகளுக்கும் தாயானாள்.

இந்த இடைவெளி பன்னிரெண்டு ஆண்டுகளாக மாறியது. 1948ம் ஆண்டு லண்டனில் ஒலிம்பிக் பந்தயம் நடைபெறப் போகின்றது என்ற செய்தியானது அவளுக்கு அமுதமாக ஒலித்தது. தொடர்ந்து இடைவிடாமல் பந்தயங்களுக்காகப் பயிற்சி செய்த பிளாங்கர்ஸ், துரிதமான பயிற்சியில் இறங்கிவிட்டாள். பிறகு, தன் கணவனோடும் குழந்தைகளோடும், லண்டன் மாநகரம் நோக்கிப் புறப்பட்டுவிட்டாள்.

ஏற்கனவே நீளத்தாண்டும் போட்டி, உயரத் தாண்டுப் போட்டி இவற்றில் உலக சாதனைகளைப் பொறித்திருந்தாலும், அந்த நிகழ்ச்சிகளை நீக்கிவிட்டு, வேறு பல நிகழ்ச்சிகளில் (Events) பங்கு பெற்று வென்று காட்ட வேண்டும் என்று விரும்பினாள். அவ்வாறே ஓட்டப் பந்தயங்களாக 100 மீட்டர் ஓட்டம், 200 மீட்டர் ஓட்டம், 80 மீட்டர் தடை தாண்டி ஓட்டம் இவற்றினைத் தேர்ந்தெடுத்தாள்.

பந்தயத்திற்குப் பிளாங்கர்ஸ் கோயன் வருகிருள் என்றதும், பரிகாசம் பண்ணத் தொடங்கினர்கள் பத்திரிக்கையாளர்கள். '20 வயது கன்னியர்களுடன் போட்டி போட, இரண்டு குழந்தைகளின் தாயார் ஹாலந்து நாட்டிலிருந்து வருகிருள்' என்று எழுதிய அவர்கள் எழுத்தில், கேலியும் கிண்டலும் கூத்தாடின. கும்மாளம் போட்டன.

'வாலிப நேரத்தில் வாய்ப்பு கிடைக்கப்பெருத வனிதை' என்று அவர்கள் இரக்கப்படவில்லை. மாருக 'ஏட்டிக்குப் போட்டி' என்ற வகையில் வரவேற்பு இருந்தது. உலக சாதனை பொறித்திருந்த அவளது உண்மையான ஆற்றலை மறைப்பது போல, அவளது வயது 30 என்பதையும் சுட்டிக்காட்டி, முன்போல ஆற்றல் இருக்காது என்பதையும் மறைமுகமாகக் கூறுவது போல, பத்திரிக்கையாளர்கள் செய்திகளைப் பரப்பினர். என்னதான் கூறினுலும், பிளாங்கர்ஸ் கோயனின் இதயம் சற்றும் கலங்கவில்லை.

போட்டிகள் தொடங்கின. 100 மீட்டர் ஓட்டத்தில் முதலாவதாகப் பங்கு பெற்று 11.9 விஞடிகளில் ஓடி, உலக சாதனையை நிறுவினுள். அடுத்த போட்டி 200 மீட்டர் ஓட்டம். அதிலும் 24.4 விஞடிகளில் ஓடி, மீண்டும் உலக சாதனையை நிறுவினுள். மூன்ருவது போட்டி 80 மீட்டர் தடை தாண்டி ஓட்டம். அதிலும் 11.2 விஞடிகளில் ஓடி உலக சாதனை. இவ்வாருக பங்கு பெற்ற மூன்று பந்தயங்களிலும் தங்கப் பதக்கம் பெற்றதோடு அல்லாமல், பார் புகழும் வண்ணம் உலக சாதனை நிகழ்த்தினுள்.

அத்துடன் அமையாது, 4 × 100 மீட்டர் தொட ரோடடப் போட்டியிலும் கலந்து கொண்டு, ஒரு தங்கப் பதக்கம் பெற்ருள். நல்ல குடும்பத் தலைவி ஒருத்தி

நான்கு தங்கப் பதக்கங்களுடன் வெற்றி மேடையில் நின்றதைக் கண்டு, வம்பர்கள் வாயடைத்துப் போயினர். 20 வயதுக்குட்பட்ட கன்னியர்கள், பந்தயங்களில் இவளை விரட்டி ஓய்ந்ததைக் கண்டு, தாங்கள் கணித்த 'வெற்றி தோல்வி ஜோதிடம்' சுக்குநூறாகிப் போனதைக் கண்டு, மனம் மாறி, வீராங்கனையைப் புகழத் தொடங்கினர். அரிய சாதனையின் முன்னே தலை குனிந்தனர்: பணிவுடன் வணங்கினர்.

இதுவரை எந்தப் பெண்ணும் இதுபோன்ற ஆற்றல் மிகுந்த அற்புத சாதனையைச் செய்ததில்லை என்ற பெரும் புகழை அடைந்தாள். அமெரிக்காவைச் சேர்ந்த **ஆல்வின் கிரேன்ஸிலின்**, பின்லாந்து நாட்டைச் சேர்ந்த **பாவோ நர்மி**, அமெரிக்க நாட்டைச் சேர்ந்த **ஜெசி ஓவன்ஸ்** எனும் மூன்றுசிறந்தவீரர்கள் போல முதல் பெண்மணியாக நின்றாள் பிளாங்கர்ஸ் கோயன்.

நாடே கூடியிருப்பது போல அவளைச் சுற்றிக் கூட்டம். தன் கணவன், குழந்தைகளுடன் குதிரைகள் பூட்டிய திறந்த வெளி சாரட்டில் பயணத்தைத் தொடங்கினாள்.

'விராங்கனை **பிரான்சினா பிளாங்கர்ஸ் கோயன்** வாழ்க' என்ற கூட்டத்தினரின் வாழ்த்தொலி விண்ணை முட்டியது.

'வேகமாக ஓடியதைத் தவிர, வேறெதுவும் நான் செய்யவில்லையே' என்றாள் அந்தத் தாய். எவ்வளவு தன்னடக்கம் பார்த்தீர்களா! வீரத்தில் பிறந்த விவேகம் அது.

60 கோடி மக்கள் அடங்கிய ஒரு நாடு, ஒரு தங்கப் பதக்கத்திற்கு 80 ஆண்டுகளுக்குமேலாக ஏங்கும்போது, ஒரு தாய் பெற்ற 4 தங்கப்பதக்கங்கள் என்ன கூறுகின்றன? தங்கப் பதக்கங்கள் வாங்க நீங்கள் தயாரா என்பதுதானே!